ஆரம்ப மதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஐப்பசி திங்கள் 21-ம் நாள் (6—11—60) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ். 16 | இதழ் 23

முனிசிப்பாலிட்டி எல்லைக்குள் உள்ள

# வீடுகள் தேசிய மயமாக்கப்படும்!

## அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை இதுதானும்

### அதிக வாடகை கொடுக்கமுடியாதவர்களுக்கும் வீடற்றோருக்கும் சகாயம் செய்யத் திட்டம்

(சுதந்திரன் நிருபர்)

முனிசிப்பல் எல்லைகளுக்குள் உள்ள வீடுகள் தேசிய மயமாக்கப்படும். இதுதான் அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கையாக இருக்கும் என்று அறிய வருகிறது.

முனிசிப்பாலிட்டிகளில் வீடில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகிவிட்டது. எத்தனையோ பேர் வீடில்லாமல் தவியாய்த் தவிக்கிறார்கள்; பாதை ஓரங்களில் கொட்டில்கள் கட்டி சேரி வாழ்க்கை நடத்துகிறார்கள். இன்னுமொருசாராருக்கு எப்படியோ வீடு கிடைத்தாலும் அதற்கு வாடகை கொடுக்க அவர்களுக்கு கட்டுபடியாவதில்லை. இதனால் அவஸ்தைப்படுகிறார்கள் அவர்கள். இந்த நிலையில் உள்ளவர்களுக்கெல்லாம் அரசாங்கத்தின் வீடுகள் தேசிய மயத் திட்டம் வரப்பிரசாதமாகும் என்று வாதிக்கப்படுகிறது.

பெரிய பட்டினங்களில் அதாவது முனிசிப்பாலிட்டிகளில் உள்ள வீடுகளில் பெரும்பாலானவை சில முதலாளிகளுக்கே சொந்தமாக உள்ளன. அவற்றைப் பெரும் வாடகைக்கு விட்டுப் பணம் பெறுகிறார்கள். எல்லாருக்கும் இவர்களிடமிருந்து வீடு வாடகைக்குப் பெற முடிவதில்லை. ஒருவாறு பெற்றவர்களுக்கும் தொடர்ந்து பெருந்தொகை வாடகை செலுத்தக் கட்டுபடியாகவில்லை.

### ஆளுக்கு ஒன்று மட்டும் விடப்படும்

இந்த நிலைமையைச் சீர் செய்யவே அரசாங்கம் வீடுகள் தேசிய மய நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது. ஒருவருக்கு குடும்பத்தோடு குடியிருக்க ஒரு வீடு போதும் என்று கருதப்படுகிறது. ஆகவே அப்படியான ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் சொந்தமாக இருந்தால் ஒன்றை மட்டும் அவர் குடியிருக்க விட்டுவிட்டு ஏனையவற்றையெல்லாம் அரசாங்க உடைமையாக்கி வீடில்லாதவர்களுக்கு பகிர்ந்தளிக்க அரசாங்கம் எண்ணியுள்ளது

### 7 முனிசிப்பாலிட்டிகள்

இலங்கையில் மொத்தம் ஏழு முனிசிப்பாலிட்டிகள், முறையே கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி, நீர்கொழும்பு நுவரெலியா குருநாகல் இருக்ின்றன. இங்கெல்லாம் வீடுகள் தேசிய மயத் திட்டத்தை அதிவிரைவில் அமுல் நடத்த அரசாங்கம் ஆலோசித்து வருகிறது

## தமிழரசுத் தந்தைக்கு 1347 சிங்களவர்கள் மகஜர்—

### பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதைப் பலமாக எதிர்த்து

(சுதந்திரன் நிருபர்)

சிங்களத்தில் 1347 கையெழுத்துகள் இட்டுச் சிங்களக் கிராமங்களில் உள்ள சிங்கள மக்கள் தமிழரசுத் தந்தைக்கு மகஜர் ஒன்று அனுப்பியிருக்கிறார்கள். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை எதிர்க்கும் மகஜர் அது

எந்தரமுல்லை, கடவத்தை, குருகுலாவை, தளுப்பிட்டியா, கோபியாவத்தை, கிரிமட்டியாகர ஆகிய சிங்களக் கிராமங்களில் உள்ள மக்கள், அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதைத் தாம் பலமாக எதிர்ப்பதாகக் கூறி தமிழரசுக் கட்சி தமக்குப் பக்கபலமாக நின்று எதிர்ப்பை இன்னும் வலுப்படுத்த உதவ வேண்டுமென்று தமிழரசுத் தந்தைக்கு அனுப்பியுள்ள மகஜரில் கேட்டிருக்கிறார்கள்.

48 'பூல்ஸ்காப்' தாள்கள் கொண்ட ஒரு பெரிய புத்தகமாக இருக்கிறது மகஜர். மொத்தம் 1347 கையெழுத்துக்கள் அதில் உள்ளன.

## கத்தோலிக்கர்கள் வைத்திருந்த இடம்

அரசாங்கம் எடுத்தது

வனத்தமுல்லையில் கத்தோலிக்க திருச்சபை கட்டிக் காத்து வைத்திருந்த ஒரு விசாலமான இடத்தை அரசாங்கம் கைப்பற்றிக்கொண்டது.

ஒரு ஆஸ்பத்திரி, விடுதி, விளையாட்டு மைதானம் ஆகியவை கட்டுவதற்காக இந்த இடத்தை கத்தோலிக்க திருச்சபை வைத்திருந்தது. கட்டட வேலைக்கான படங்களும் தயாரிக்கப்பட்டு சிறு சிறு வேலைகளும் தொடங்கப்பட்டுவிட்டன.

இந்த நிலையில் அரசாங்கம் குறுக்கிட்டு அந்த இடத்தை சுவீகரித்துக் கொண்டது வீடுகள் கட்டுவதற்குத் தேவை என்று சொல்லியே அரசாங்கம் சுவீகரித்தது.

கத்தோலிக்க திருச்சபை இப்போது பிரதமருக்கு இதுபற்றி விண்ணப்பித்து இருக்கிறது.

## மீண்டும் அவமானச் செயல் அரசகரும மொழி இலாகாவில்!

### சிங்களப் பட்டியலில் கையொப்பமிட்டு சம்பளம் பெற்றனர் தமிழ் ஊழியர்கள்

(சுதந்திரன் நிருபர்)

தனிச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியலில் கையொப்பமிட்டுத் தமது ஒக்டோபர் மாதச் சம்பளத்தைப் பெற்றனர் சில தமிழ் ஊழியர்கள். இந்த அவமானச் செயல் அரசகரும மொழி இலாகாவின் புத்தக வெளியீட்டு பகுதியில் நடைபெற்றது.

அரசகரும மொழி இலாகாவில் உள்ள சில தமிழ் ஊழியர்கள் தமது இனத்துக்கே அழியா வடுவை ஏற்படுத்தக்கூடிய ஈனச் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற செய்திகள் அவ்வப்போது சுதந்திரனில் வெளியிடப்பட்டு வந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். இந்த ஊழியர்கள் மீண்டும் அவமானச் செயலில் இறங்கியுள்ளார்கள்.

சில ஊழியர்கள் தமது மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தச் சிங்களத்தில் கையொப்பமிட்டுச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளவும் தயாராக இருந்தார்கள் என்று தெரிய வருகிறது.

### ராகமை ஆஸ்பத்திரி ஊழியர்கள்

இவர்கள் இப்படி இருக்க சிங்களவர்கள் மத்தியில் ராகமை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமைசெய்யும் ஏழு தமிழ் அதிகாரிகள் சம்பளப் பட்டியலில் தமது பெயர்கள் சிங்களத்தில் எழுதப்பட்டு இருந்ததால் சம்பளத்தைப் பெற மறுத்து விட்டார்கள். சுகாதார அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பெயர்களை ஆங்கிலத்திலும் எழுதும்படி கட்டளையிட்டு, அதன்படி தமது பெயர்கள் சம்பளப் பட்டியலில் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட பின்னரே அவர்கள் சம்பளத்தைப் பெற்றார்கள்.

### துறைமுகக் கார்ப்பரேஷனில்...

இதே விதமான தமிழுணர்ச்சியோடு துறைமுகக் கார்ப்பரேஷன் தமிழ் ஊழியர் ஒருவரும் நடந்து கொண்டார். சம்பளம் பெறுவது சம்பந்தமான விவரங்கள் அவருக்குச் சிங்களத்தில் அனுப்பப்படவே அவர் தமது சம்பளத்தைப் பெறுமல், தேசியமயசேவைகள் மந்திரி சரத் விஜயசிங்

(12-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




மூலம்

ரோதம்

படை (ECZEMA)

மாதவிடாய்



கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

68, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட இருந்து நமக்குக் கேடு விளைவிக்கும் விஷ ஜெந்துக்கள் பல

## அவற்றுள் எலி குறிப்பிடத்தக்கது— பதினெட்டு வகை உண்டு

பாம்புகள் பற்றியும் பாம்புக் கடி பற்றியும் விஷ வைத்தியர் திரு. க. சிற்றம்பலம் எழுதிய கட்டுரைகள் சில வாரங்களுக்கு முன்னர் சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டிருந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த அரிய கட்டுரைகளை வழங்கிய வைத்தியர் இப்போது விஷ செந்துக்கள் பற்றியும் அவற்றால் உண்டாகும் ஆபத்துக்கள் பற்றியும், அவற்றை நீக்கும் வழி வகைகள் பற்றியும் விளக்கி எழுத முன் வந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இங்கு எலிகள் பற்றிய கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது

**விஷ வைத்தியர் க. சிற்றம்பலம்**

நாம் நமது பாதுகாப்புக்காகவும், வசதிக்காகவும், வீடுகளை அமைத்து வாழுகின்றோம். ஆனால் நம்மையறியாது "அழையா விருந்தினர்களாக, எங்கள் வசதிக்காக அமைக்கப்பட்ட வீட்டில், தாங்கள் தங்களுக்கு வசதி செய்து சீவித்து எங்கள் பொருட்களையும் நாசம் செய்து, உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்வார்போல எங்களையே பலியாக்கி வீட்டில் வாழும் விஷ செந்துக்கள் அனேகம் உண்டு. அவைகளைப் பற்றி நம்மில் அநேகர் சிந்திப்பதில்லை. ஆபத்து வந்தபின்னர்தான் கவனம் செலுத்துவார்கள். நாம் கவனமாக இருந்தால் அவற்றின் விஷத்தால் தாக்கப்படாமல் வாழுதல் கூடும்.

### வீட்டில் உள்ளவை

வீட்டில் வாழும் விஷசெந்துக்களாவன: (1) எலி (2) புலிமுகச்சிலந்தி (3) பூரான் (4) தேள் (5) அரணை (6) பல்லி (7) வண்டு (8) குளவி (9) நாய் (10) பூனை (11) மண்ணுணிப் பாம்பு (12) சிவர்வளையன் (13) உண்ணி (14) தவளை (15) அட்டை (16) வீட்டு மிருகங்களாகிய மாடு, ஆடு, குதிரை, கழுதை, (17) எறும்பு (18) கீரி என்பனவும் பாம்புகளுமாகும். இவை நமது வீட்டிலிருந்து நஞ்சை பாய்ச்சுவதால், நாம் துன்பத்துக்குள்ளாக நேரிடுகின்றது. இவைபற்றிஇங்கே தனித் தனி ஆராய்வோம். மூலகாரணமான முதல்வனும் வாரணமுகத்தானின் வாகனமாக விளங்கும் எலியைப் பற்றி முதலில் ஆராய்வோம்.

### எலிகளில் 18 வகைகள்

எலி என்பது, ஒருவகையானது என்பதுதான் மக்களின் உள்ளங்களில் பதிந்துள்ள கருத்தாகும். எலிகளில் 18 வகை உண்டென்றால் ஆச்சரியம்தான். இது பற்றி ஆருடகாரரும், சித்தர்களும் தெரிவிக்கின்றார்கள்:

"எலிக் குலம்
பதினெண் வகை அவைகளை
இயம்புகிறேனவர்க்கும்
நயம் பெறவே
வலிக்கும் கத்திரிமணியன்
செம் மூக்கன்,
வள்ளி, குறட்டை,
கறுங்காற் றலையன்,
விடவெலி, செந்தலை,
முத்தி, செவ்வெலி,
விங்கெலி, உலர் வெலி,
தூங்கெலியும்
புடையெலி, இரைப்பெலியும்
செங்கண்ணன்,
புள்ளி, கருடன்,
குருந்தாவெலியும்
நச்செலி யீரொன்பதும்
கடித்திடும்........."

ஒவ்வொரு எலிக்கும் நாமம் சூட்டி ஆருடன் அழைக்கின்றது.

### விஷம் இல்லாதவை

இந்த 18 வகை எலிகளில் இருவகை எலிக்கு விஷமில்லை. (1) வெள்ளெலி, இதை வேட்டை ஆடி என்பர். சில மனிதர்கள் இதன் இறைச்சியை உண்கிறார்கள். (2) சுண்டெலி: இது உருவத்தில் சிறியது. மனிதரைத் தாக்காது. கீச், கீச் சென்று ஓடித்திரியும். ஏனைய 16 வகை எலிகளும் கொடிய விஷமுடையவையாகும். இவைகளால் தாக்கப்பட்டவர்கள் உடனேயும் இறக்கக் கூடும். கொள்ளை நோய் (பிளேக்கு) முதலிய கொடிய வியாதிகளைப் பரப்பக் கூடியவையும் எலிகளே.

### விட எலி

எலிகளில் கொடிய விஷமுடையது விட எலியாகும். இதுவே உடனே கொல்லும் விஷமுடையது. பல கொடிய சர்ம நோய்களையும், சுவாசப்பை, இரத்தாசயம் முதலிய உள்ளுறுப்புகளைத் தாக்கி சதா நோயுண்டாக்கும் விஷ முடையதாகவும் எலியிருக்கின்றது. எலிக் கடியை அசட்டைபண்ணுபவர்கள் நோய்க்குத் தங்களை அர்ப்பணிக்கின்றவர்களாவார்கள். நித்திரையிலே தான் பொதுவாக எலி கடிக்கின்றது. கடியுண்டவருக்கு என்ன கடித்ததென்பது தெரியாது. நோவுண்டாகியவுடன், அல்லது வீக்கமுண்டாகியவுடன், ஆங்கில வைத்தியம் பெறும் பொருட்டுக் கிட்டவுள்ள வைத்தியசாலைக்குச் செல்கின்றார்கள். விஷ நோயைப்பற்றிய விசேட அறிவு இல்லாதிருப்பதால் தங்களின் அனுமானப்படி அவர்கள் வைத்தியம் செய்கின்றார்கள் அதனால் பலருக்கு நோய் ஒன்றிருக்க வைத்தியம் இன்னொன்றாக மாறி, விஷம் தன் வேலையை விரைவில் பூர்த்தி செய்து, நோய் என்ன என்று எவரும் அறிய முடியாத முறையில் மரணத்துக்கு வழியாகின்றது.

### குறட்டை எலி

சிலருக்கு பைத்தியம், தேகப்பிடிப்பு, தேக எரிவு, நடுக்கம் முதலியவை அவர்களின் இயற்கை எனத்தக்கவாறு எலி விஷம் செய்கின்றது. ஒரு காலமும் நித்திரையில் குறட்டை விடாது நித்திரை செய்தவர் திடீர் என்று சத்தத்துடன் குறட்டைவிட்டு நித்திரை செய்ய ஆரம்பித்தால், குறட்டை எலியால் தாக்கப்பட்டார் என்று அனுமானிக்கலாம். தேகத்தில் வெள்ளையாகப் படரும் ஒருவகை சர்ம நோயும் எலிக் கடியால் உண்டாவதை அநுபவவாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே எலிகளின் விஷத்தை அசட்டை பண்ணாமல் தக்க சிகிச்சை முறைகளைக் கைக்கொள்ளுதல் வேண்டும்.

### பாதுகாப்பு

எலிகளை நாம் வசிக்கும் வீடுகளில் வசிக்க இடங்கொடாதவாறு பாதுகாப்பாக நாம் இருத்தல் வேண்டும். தின்பண்டங்களையும், சேலைகள் முதலிய பொருட்களையும் நாசம் செய்வதுமல்லாமல் நமது உயிருக்கே பகைவனாக உள்ளது எலி. தின்பண்டங்களைக் கண்ட இடங்களில் வைப்பதாலும், உடுப்புப் பெட்டிகளைக் கவலையீனமான முறைகளில் திறந்துவிடுவதாலும், அவைகள் வசிப்பதற்குச் சாதகமான வேறு காரணங்களாலும் எலிகள் வீடுகளில் அதிகம் விருத்தியாகின்றன. அவற்றை அழிப்பதற்கு ஒவ்வொருவரும் கூடிய முயற்சி எடுத்தல் வேண்டும். பொறிகள்மூலம் அழித்தல், பூனைகளைக்கொண்டு அழித்தல் ஆகியவையால அவற்றை அழிக்கும் வகைகளையும் இடத்துக்கேற்பதாகச் செய்தல் வேண்டும்.

### ஆபத்து

பொதுவாக எலிகள் இரவில்தான் நடமாட்டம் தொடங்கும். ஆகையால் உடைத்த தேங்காய், மரக்கறிச் சாமான்கள், வேறு உணவுப் பதார்த்தங்கள் ஆகிய எல்லாவற்றையும் மூடிவைத்தல் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவையுண்ட உணவுகளை நாங்கள் உண்பதால் எலி கடிக்காமலே விஷம் நமது வயிற்றுட் சென்று குடல் நோய்களைக்கூட உண்டாக்குகின்றது எலியின் மலம், சலம் முதலியனவும் விஷமுடையவையாகும். ஆகையால் கூடியவரையும் எலி ஒழிப்புத் திட்டங்களை நாம் கைக்கொள்ள வேண்டும்.

—[ தொடரும் ]


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்கவில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளிப்பேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்;

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


# தமிழர் மணம்

**கா. பாக்கியரெத்தினம் F. R. G. S., F. R. Econ. S.**

உலகமெலாம் நெட்டிருள் நீங்கி வெட்டென விடிந்து அறிவொளி படருமிக்காலத்து தமிழர் தம் தொல்தூய வாழ்வினைப் பழந்தமிழ் நூற்றுணை கொண்டறிந்து அதன் வழி நிற்க முயல்வதைக் காண்கின்றோமாகையான் பண்டைப் பனுவல் தரு தமிழ் மரபினைச் கண்டவாறு கொண்டுரைத்தலும் பயன் தருமெனக் கருதி இஃதெழுதுகின்றும்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரிய மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர்
கொடுப்பக் கொள்வதுவே" [1]

என்பது தொல்காப்பியன் நூற் சூத்திரம்

"..............................

கற்பெனப் படுவது களவின் வழித்தே" [2] என்பது களவியல் நூற்பா களவிற் கிழவனும் கிழத்தியுமாய் ஒழுகிய காதலர் இருவரும் தம் காதல் வெளிப்பட மணப்பதே கற்பென்பது தமிழ் நூலோர் பழ வழக்கு. "பிறர்க்குரித் தென்று இருமுது குரவரலற் கொடையெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவரும் சரந்த உள்ளத்தோடு புணர்ந்த களவாதலின்" [3] என்பதாற் களவென்பது யாதென்பதும், "...............களவு என்னுஞ் சொற் கேட்டுக் களவு தீதென்பதூஉம், காமம் என்னுஞ் சொற்கேட்டுக் காமம் தீதென்பதூஉம் அன்று; மற்று அவை நல்ல ஆமாறும் உண்டு!" [4] என்பதாற் "களவு" தீதன்றிநன்மையும் பயக்குமென்பதும், "இருவரும் (தமியராய்) எதிர்ப்பட்ட ஞான்று தொடங்கி உழுவலன்பால் உரிமை செய்து ஒழுகலிற் "கிழவனும் கிழத்தியும்' என்றார்" [5] என்பதாற் "கிழவன் கிழத்தி" என்றதற்குக் காரணமும் காண்க.

கண்ணகி கோவலன் மங்கல மண விழா உழுவலன்புடையார் காதற் கிழமையால் நிகழ்ந்த தாகக் குறிப்பாற் சிலம்பு சுட்டுவதும்; பெற்றோர் தரவோ, விற்றுத்தாலோ உற்ற மகளிரை உரிமையாய் மணக்கும் ஆரியப் பெருமகன் இராமன் சீதையை முதலில் மணவறையதனிற் கண்டு மணந்து கொண்டு பின் காதல் காட்டினனென வான்மீகி கூறியிருக்கக் கம்பர் தம காவியத்து

"எண்ணருந் நலத்தினா ளினையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை
கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலை பெறா
துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா
னவளு நோக்கினாள்.

நோக்கிய நோக்கெனு
நுதிகொள் வேலினை
ஆக்கிய மதுகையா னோளி
ஞழ்ந்தன
விக்கிய கனைகழல் வீரன்
செங்கணும்
தாக்கணங் கனையவ டனத்தி்ற்
றைத்தவே.

பருகிய நோக்கெனும் பாசத்
தாற்பிணித்
தொருவரை யொருவர்த
முள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க
ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய
மெய்தினார்.

மருங்கிலா நங்கையும்
வசையிலையனும்
ஒருங்கிய விரண்டுடற் குயி ரொன்
றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி
நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல்
வேண்டுமோ.

அந்தமி னோக்கிமை யிணைகி
லாமையாற்
பைந்தொடி யோவியப் பாவை
போன்றனள்
சிந்தையு நிறையு மெய்ந்
நலனும் பின் செல
மைந்தனு முனியொடு மறையப்
போயினான்"

எனக் கூறி ஆரிய மன்றலைத் தமிழ்ப் பழ வழக்கால் களவுக் காதல் கனிந்த கற்பற மண விழா வாக்கித் தருதலும், வடநூன் முடிபும், மரபும், வழக்கும் மலிந்த காலத் திருத்தக்க தேவர் ஆரியப் பெருமகனை சீவகன் கதையைப் பாடுஞ் செய்யுளில் அன்னவன் மணத்தைக் களவின் வழித் தாம் கற்பு மணமாக்கித் தருதலும் தமிழ் மரபு காதல் மணமொன்றேயென்பதை உறுதிப்படுத்துவன.

தொல்காப்பியன் தான் விளக்கும் ஐந்திணைக் காதலறம் "பாடல் சான்ற புலனெறி வழக்கில்" மட்டுமன்றித் தன் காலத் தமிழகத்து "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" நிகழ்ந்த மரபெனத் தெளியவுரைத்திருப்பத்தை அறியாச் சிலர் தமியர் கண்டு அன்பொடு புணர்ந்த காமக் கூட்டம் மணயற மாட்சிக்கு விலை முதலாதல் உலகியலற்ற செய்யுள் வழக்கெனக் கூறவும் துணிவர்.

அன்றிருந்தோர் போற்றிப் பேணிய காதல் மணத்தைப் பின் வந்தோர்

"நாடகத்திற் காவியத்திற்
காத லென்றால்
நாட்டினர் தம் வியப் பெய்தி
நன்று மென்பர்;

(15-ம் பக்கம் பார்க்க)

(1) தொல். பொருள். 142
(2) இறை. களவு. 1 [partly obscured]
(3) தொல். பொருள். 92 சூத். உரை. நச்சி.
(4) இறை. கள. உரை.
(5) தொல். பொருள். 142 சூத். உரை. நச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



கா. மதிவண்ணன்,
அக்கரைப்பற்று.

கே: பிறருடைய மரணத்தைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் யார்?

ப: இன்சூரன்ஸ் ஏஜண்டுகள்

கே: டாக்டர் நாகநாதன் சிகரட் புகைப்பாரா?

ப: தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் பெரும்பாலோர் புகை பிடிப்பதில்லை வி. என். நவரத்தினமும், வி. தர்மலிங்கமும் தான் பெரும் புகையர்கள். 'புகை பிடிப்பதில்லை, தாடி வழிப்பதில்லை' யென்று திரு. நவரத்தினம் ஒரு தடவை சபதம் செய்தார் தாடிச் சபதம்தான் நீடிக்கிறது. புகைச் சபதம் புகைந்து விட்டது.

ஃ

மு. பரமசிவம், யாழ்ப்பாணம்.

கே: கொழும்பில் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளில் சிலர் சிங்கள சிறீ போட்ட டாக்ஸிகளில் ஓடித் திரிகிறார்களே, இது சரியா?

ப: இதில் தவறு ஒன்றும் இல்லை. தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களச் சிறீ காரில் ஏறிப்போவதுதான் தவறு. சிங்களப் பிரதேசத்தில் ஏறிப் போவது தவருகாது. அப்படிப் பார்க்கப் போனால் கொழும்பில் பஸ் வண்டியில் கூட தமிழர் ஏறமுடியாதே!

நித்தியானந்தன், தங்கமலை.

கே: மேதையென்றால் யார்?

ப: மே மாதத்தில் தோன்றி தை மாதத்தில் மரிப்பவன்!

ஃ

அ. பேரின்பராஜா, மட்டக்களப்பு

கே: தமிழகத்துப் பேனா மன்னர்களான ஜெகசிற்பியனுக்கும், அகிலனுக்கும் உள்ள எழுத்தின் ஆற்றலைத் தரப்படுத்துங்கள். இருவரும் யார்?

ப: இருவரும் சிறந்த எழுத்தாளர்கள். ஜெகசிற்பியன் ஒரு கிறிஸ்தவர். அகிலன் ஒரு இந்து. ஜெகசிற்பியன் ஆனந்த விகடனில் பரிசு பெற்ற திருச்சிற்றம்பலம் என்ற சரித்திர நவீனம் எழுதியதன் பின் 'மார்க்கட்' பிடித்து இப்போது ஒரு நல்ல சரித்திர நாவலாசிரியராக விளங்குகிறார். அகிலன் சிநேகிதி என்ற கதை எழுதியதன் மூலம் கொஞ்சம் புரட்சிகரமான எழுத்தாளர் என்று புகழ் பெற்று இப்போது ஒரு சிறந்த சமூகக்கதை ஆசிரியராக விளங்குகிறார்.

ஃ

எம். சி. எம். முகம்,
மட்டக்களப்பு

கே: கண்ணையும் படைத்து, கன்னிப் பெண்ணையும் படைத்தது கடவுளானால், பெண்ணைப் பார்ப்பது ஆணின் கண் செய்யும் குற்றமாகுமா?

ப: கண், சாதாரண கண்ணாக, சகோதரனின் கண்ணாகப் பார்ப்பதில் எதுவித குற்றமும் இடையாது. கண் காமக் கண்ணானால் அது குற்றமே குற்றமாகும். அந்தப் புண் அகற்றப்பட வேண்டியது.

ஃ

பத்மாவதி இராசதுரை, ஊரெழு

கே: யாழ்ப்பாணம் சென்ற மூன்று மந்திரிகளும் அங்கே எதைப் பார்த்தார்கள்?

ப: தங்கள் தலைவிதியைப் பார்த்தார்கள். அதாவது கொக்குவில்லில் இருக்கும் ஒரு சோதிடரிடம் சென்று தங்கள் பதவிகள் எத்தனை காலம் நீடிக்கும் என்று கிரகங்களைக் கேட்டுச் சொல்லுமாறு மண்டியிட்டார்கள். சோதிடரும் நன்கு புளுகி அவர்கள் தலையில் 'ஐஸ்' வைத்திருப்பார் என்று நம்புகிறோம்.

ஃ

செ. டோமினிக்,
கொட்டாஞ்சேனை

கே: குயுக்தியாரே நான் மிகச் சிறந்த கேள்விகள் பல எழுதியும் நீங்கள் பதிலிறுக்கவில்லையே, காரணம் என்ன?

ப: டோமினிக்காரே. நீவிர் சிறந்த கேள்விகளை எழுதியுள்ளீர் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நான் என்ன செய்யட்டும்? "திருவாளர் குயுக்தியார்" என்று அச்சிட்ட விலாசம் ஒட்டி அனுப்பப்படும் அஞ்சல் அட்டைகளை மட்டுந்தானே ஆசிரியர் என்னிடம் பதிலிறுக்கத் தருகிறார். இனி, மேல் விலாசம் ஒட்டி அனுப்பத் தவறுதீர். அப்போது ஒரு சில கேள்விகளுக்காவது பதில் கிடைக்கும்.

ஃ

பொ. சண்முகநாதன்,
மானிப்பாய்

கே: சில பெண்கள் தங்கள் அவயவங்களையெல்லாம் வெளியில் தெரியும்படி காட்டிக் கொண்டு தெருவில் நடக்கிறார்களே அவர்களைத் தாங்கள் எப்படி அழைப்பீர்கள்?

ப: ஈழத்தின் பிரிஜெட் பார்டோட்கள் (Brigette Bardot) என்று அழைப்பேன்.

கே: திருவாளர் சுந்தரலிங்கம் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: வவுனியாவில் உணவு உற்பத்தி செய்து நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

ஃ

விஜயன், வெள்ளவத்தை

கே: Honourable, Honarary என்ற இரண்டு ஆங்கிலப் பதங்களுக்கும் தமிழில் "கௌரவ" என்ற சொல்தான் வழங்கப்படுகிறது இது சரியா?

ப: இல்லை. Honourable என்பதற்கு மதிப்பு மிக்க, கனம் பொருந்திய என்ற பதங்களே மிகப் பொருத்தமானவையாகும். Honarary என்பதற்கு கௌரவ என்று கூறலாம். Guest Artist என்பதையும் கௌரவ நடிகர் என்று சொல்லுகிறார்கள். இதுவும் சரியல்ல. அதிதி நடிகர் என்றுதான் கூற வேண்டும்.

ஃ

மு. பலராமன், பதுளை

கே: உலகத்தின் மிகப் பெரிய ஓட்டப் பந்தயம் எங்கே நடைபெறுகிறது?

ப: ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நடைபெறுகிறது. எதிர்காலம் என்ற ஒரு பெரிய எனவைத் தொடர்ந்து மனிதன் தினம் தினம் முடிவற்ற ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டிருக்கிறானே!

ஃ

த. செந்தில் நாதன்,
யாழ்ப்பாணம்

கே: நகரங்களில் அபரிமிதமாகப் புரளும் ஒன்றைக் கிராமத்தில் அதிகம் காண முடியாவிட்டாலும் உணர முடிகிறது. அது என்ன சொல்ல முடியுமா குயுக்தியாரே?

ப: ஓ, முடியுமே. நாணயம்!

ஃ

க. சுப்பிரமணியம், களபூமி

கே: இன்றைய நவநாகரிகப் பெண் மணிகள் குழந்தையை இடுப்பிலோ கையிலோ தூக்கிச் செல்ல விரும்பாமல் வண்டியில் வைத்துத் தள்ளுகிறார்களே, இது பற்றித் தங்கள் கருத்தென்ன குயுக்தியாரே!

ப: கிணற்றில் தள்ளிவிட நாட்டின் சட்டம் இடம் கொடுக்காததால் அவர்களில் சிலர் வண்டியில் வைத்துத் தள்ளுகிறார்கள், அந்த வரையில் பிழைத்தது பிள்ளை!

ஃ

செல்வி ஞானமணி,
கொள்ளுப்பிட்டி.

கே: இக்கால நவநாகரிக இளமங்கையரை முத்தமிட்டால் வாலிபர்களுக்கு கிடைப்பதென்ன?

ப: பாவம், அவர்களுக்கு கிடைப்பது வெறும் 'லிப்ஸ்டிக்'கின் கறைதான்!

ஃ

வி. என். ராஜா, கிளிநொச்சி

கே: தங்களிடம் கேள்விகள் கேட்டுத் தபால் தபாலாக எத்தனையோ எழுதினேன் பதிலில்லையே?

ப: தங்களை யார் தபாலில் எழுதச் சொன்னார்கள்? அஞ்சல் அட்டையிலன்றோ கேள்விகள் எழுதப்பட வேண்டும்.

ஃ

ராஜா ஆனந்தம், மண்டூர்

கே: தற்பொழுது தமிழரசுக் கட்சியில் உள்ள எம். பிக்களில் ஹாஸ்யத்துடன் பேசக் கூடியவர் யார்?

ப: காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் தான் ஹாஸ்ய மன்னராக விளங்கினார். இப்போது உள்ளவர்களில் திரு. வி. ஏ. கந்தையாவைக் குறிப்பிடலாம். அமரர் வன்னியசிங்கத்தை என். எஸ். கிருஷ்ணனின் தரத்தில் வைத்தால் திரு. வி. ஏ. கந்தையாவை சந்திரபாபுவின் தரத்தில் வைக்கலாம்.

# உலகம் ஒரு வீடு!

— "மஹாகவி" —

சாமத் தெழுந்த முழுச் சந்திரன்போல்
நெஞ்சகத்துக்
காமத் திருளிடையே காதல்
விளக் கெடுத்தாய்;
கண்ணின் கரு வெளிச்சம் காட்டக்
கருத் தற்ற
மண்ணும் அதன் மேல் மடியும்
வரை நடத்தும்
வாழ்வும் புதிய வளங்கொண்
டிலங்கியன;
சூழும் துயர் முகிலின் ஓரங்கள்
சோதி பெறல்
நீ சிரிக்கும் போதில் நிகழ்கின்ற
மின்வெட்டின்
தேசினால் என்றும் தெரியும்
அடிபெண்ணே!

இச்சைபோல் எங்கள் எழிற் றமிழைத்
தம்வாயால்
உச்சரித்துப் பிய்த்தும், உவகையே
ஊட்டுவதும்,
பஞ்சுப் பொதியே நம் பாரங்கள்
என்பதுவும்
பிஞ்சுக் குழந்தை; பிரளயம் போல்
வீட்டிலே
உள்ளும் புறமும் அவை ஊசாடிப்
பேரின்ப
வெள்ளம் தனில் மிதக்க விட்டுவிடும்
நம்மை; ஆம்,
நீயும் படைத்தாய் நிசக் 'கவி'கள்!
என் வீடு
வாயில் முழுவதுமே வைத்தாய்
ஒளி நீயே!............

ஆனால், எம் வீட்டுக்கும் அப்புறத்தில்
வீதியிலே
போனால்—இருண்ட பொழுதைப்
புலர்விக்க
நின்றெரியும் மின்னின் நெடு நேர்
நிரை உளதே!
ஒன்றவிந்தாற் கூட உடனே வந்
தெப்படியோ
மீண்டும் கொளுத்திவிடும் விண்ணர்,
இடி பாய்ந்து
மாண்டும் ஒளி விளைக்கும் மாவீரர்,
ஓயாது
சக்கரங்கள் சுற்றி உயிர்ச் சக்தி பிறப்
பித்திருவின்
சிக்கறுத்து வைக்கும் செயலாளர்
உள்ளார்கள்!

தூரத்தில் உள்ள தொழிலகத்துக்
கென்றும் எமை
நேரத் துடன் அனுப்ப நீண்டுகிடக்
கின்ற ரயிற்
பூதத்தைப் பார்; அதுவோ போகாது
தன்னாலே.
வாதத் தால் எம் கால் வழங்கா
விடினும் என்ன—
கூட்டிப் போய் நாங்கள் குறித்த
இடத்து விட
ஓட்டுகிறான் வண்டி ஒருவன்;
அவன் வாழ்க!
நீரைக் கரியின் நெருப்பாற்
சுடவைத்தில்
லூரை முழுதும் ஒரே தொடரிற்
கொண் டிழுக்க
வல்ல பெரியான்! வழியிலே
கைகாட்டி
சொல் கேட்டுச் சற் றெம்
[ பொறுமையினைச்
சோதிக்க
நின்றாலும், அன்னோன் நெடுஞ்சேவை
பாராட்டல்
[illegible] அவனுக்கும்
நன்றிகள்!

உள்ளே நுழைந்தால், உளுந்து
வடை தொடக்கம்
எள்ளுருண்டை மட்டும் எமக்காய்
இயற்றி வைத்துக்
காத்திருப்பார்; நாம் போய்க்
[ கதிரையிலே
உட்கார்ந்து
வார்த்தை சொல்லா முன்னம்
[ வரும் அவைகள்;
எத்துணை
அன்பவர்க்கு! கேட்ட அதை அதைஅங்
கக் கணத்தே
முன்படைப் பார் நின்று; முகம் சிறிதும்
கோணுமா?
வீட்டுக்கு வந்த விருந்தை
மலர்விக்க,
பாட்டின் இனிமை வசனத்தும்
காட்டுகிற
பேச்சுடைய பெண்ணினம்
[ அப் பேர்களிடம்
கற்றிடலாம்!
ஆச்சுது உண் டென்றால் அதற் கெமது
நன்றியைக்
காசாக்கி அந்தக் கடையில்
தரப் போமா?
ஆசையுடன் செய்த அவர் பணியை
நாம் மறத்தல்
வேண்டாம்! பசித்த வெறும் வயிற்றில்
பால் வார்க்கும்
மாண்பைப் பணமும் மறைக்க
முடியாது!

முட்டைகளைத் தூக்கு கிறார்
[ முந்தி வறிது;
நோய் பிடித்துப்
பாட்டில் விழுந்தால் பல மருந்
தூட்டுகிறார்;
காடு வெட்டித் தந்தார் விறகு;
கழனிகளில்
மாடு பட்ட பாடாய் உழைத்து
மணி அரிசி
உண் டாக்கி உன்னை உதவுகிறார்;
வாழ் நாளைக்
கொண்டாட்ட மாக்க ஒரு கோடி
செயல் புரிவார்!

ஓடும் இஞ் ஞாலம் பனைத்தால்
என உளறும்
மூடர் முடிக! முழுமைக்கும்
அஃது பொது
ஆதலினால் சற்றே அதை மறந்து
நோக்கினால்
கோத கன்றே உண்மையும் கொஞ்சம்
தெளிவாகும்;
வீட்டில் இல்லாள் சேவையினை
[ விற்பனையா
செய்கின்றாள்?
நாட்டில் வெளியில் நடக்கிறது
வேறன்றே!
அன்பால் இயங்கும் அகிலம்;
அனைத் துலகும்
அன்பால் ஒரு வீடே ஆகும்!
இருள் பறக்கும்!............

கட்டழகி, போதும் கவிதை;
இதன் விலையாய்
மொட்டு விரிந்த முறுவல் ஒன்று
தாராயோ?

★

(இலங்கை வானொலித் தீபாவளிக்
கவி அரங்கிற் பாடியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

## சிங்களம் தெரியாதவர்களுக்கு திரிசங்கு சொர்க்கந்தான்!

## ஆபத்தை அகற்றவேண்டும்

இதனை வாசிக்கும் தமிழன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். இங்கே கூறப்படுபவற்றை நன்கு சிந்தித்து உடனே செயலாற்றுங்கள். இவற்றைப்பற்றி உங்கள் நண்பர்கள் பத்து இருபது பேருக்கு ஆகுதல் கூறுங்கள். அவர்களையுஞ் செயலில் இறக்குங்கள். இவ்விடயத்தை வாசிக்குமாறு உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் இதனைக் கொடுங்கள். இந்த வேண்டுகோளைத் தமிழ்த் தாயின் பெயரால் மானமுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் விடுக்கிறோம். இதற்குக் காரணங்கள் பலவாகும்.

நம்முடைய மக்களிற் பலர் இன்னும் போதிய அளவுக்குத் தமிழ் மொழியின் அவலநிலையை எண்ணிப் பார்க்கவில்லை. தம் தாய் மொழியைப் போற்றிக்காத்தற்கு முன்வரவுமில்லை. இலங்கையின் அரசியல் வட்டாரத்தில் நடப்பவற்றையும் சிங்கள மொழி வெறியர்களின் திட்டங்களையும் அறியாத தமிழர் பலராகவிருக்கின்றனர். வயிற்றுப் பிழைப்புக்குச் சிங்களக் கடிதங்களுக்குக் கையெழுத்து வைத்துப் பிழைக்கும் பலர் தமிழிலே தங்கள் கையெழுத்தை வைக்கவோ தமிழிலே பத்திரங்களை நிரப்பவோ தமிழிலே முகவரி எழுதவோ பயப்படுகிறார்கள்; கூசுகிறார்கள்.

ஃ

மொழிப் பிரச்சினைக்கு நாடோறும் சூடேற்றப்படுகிறது. தமிழ்ப் பகுதிகளுக்குச் சென்ற அமைச்சர்கள், தமிழருக்கு நீதி வழங்குவோம்; தமிழைத் தாழவிட மாட்டோம் என்றெல்லாம் அழகாகப் பேசிவிட்டு வந்தார்கள். அவர்கள் பேச்சின் ஒலியடங்குமுன் இங்கே சிங்களத்தை அடுத்த ஆண்டு தொடக்கம் அரசகரும மொழியாக்கப் பல முயற்சிகள் நடக்கின்றன. தமிழைப் பற்றி—அதன் நிலைமையைப் பற்றிப் பேசுவாரில்லை.

ஃ

இலங்கையில் மிக விரைவில் பேய் மழையும் பெருஞ் சூறுவளியும் வரப்போகின்றன. கடற் கொந்தளிப்பும் கரைகளைச் சிதைக்கும் புவி நடுக்கமும் உண்டாகலாம் இப்பொழுதே கருமேகங்கள் சூழ்ந்து திரண்டு கருக்கொள்கின்றன அழிவு வருமுன் காத்துக்கொள்ளத் தமிழர்கள் உடனே ஆவன செய்வார்களாக முன் தூங்கி மடிந்ததுபோல இம்முறையும் செய்யாதீர்கள்.

ஃ

1961 ஜனவரி 1ம் நாள் அரசாங்க அலுவலகங்கள் முழுவதிலும் சிங்களம் ஆட்சி செய்யும். இந்நாள் எல்லா அலுவலகங்களிலும் பாற் சோற்றுடனும் வெடிகளுடனும் கொண்டாடப்படும் நாட்டிலும் விழாக்கள் பல நடைபெறும். சிங்களந் தெரியாதவர்களுக்குத் திரிசங்கு சுவர்க்கமே நிச்சயம்.

இந்த ஆபத்திலிருந்து தமிழ் பேசும் இனத்தைக் காப்பாற்றத் தமிழியக்கத் தொண்டர்கள் தீவிர முயற்சி செய்ய வேண்டும். இதுவரை தமிழியக்கத் தொண்டர்களாகச் சேராதவர்கள் இனியும் காலம் பிந்தாமல் உடனே சேர்ந்து கொள்வதவசியம். அஞ்சலட்டையில் உங்கள் பெயர், முகவரி முதலானவற்றை எழுதி தமிழியக்கம் மே/பா சுதந்திரன், தபால் பெட்டி 1183, கொழும்பு என்ற முகவரியிட்டு எழுதுங்கள்.

### தமிழியக்கத் தொண்டர்கள்

586 இ. சி கமலநாதன், கல்கிசை; 587 சின். பொன்னையா. யாழ்ப்பாணம்; 588 செ. ந துரைராசசிங்கம், பம்பலப்பிட்டி; 589 மறையவன், வெள்ளவத்தை; 590 தி விசயராசா, வெள்ளவத்தை; 591 சு. கணபதிப்பிள்ளை, கொழும்பு-12; 592 கனகநாயகம், கொழும்பு-15; 593 சு. யோ. அருள்நாயகம்; பொல்காவெல; 594 டீ. எம். செ பி ஜாயா, மருதானை; 595 ந. ஆனந்தராசா, சித்தன்கேணி; 596 செ. ரெங்கராசா, பலாங்கொடை.

597 ஆ. சாமுவேல், பெல்மதுளை; 598 ந. இராசகோபால், நுவரெலியா; 599 ஐ அருணாசலம், பரந்தன்; 600 எம். யஸீல், கொழும்பு-15; 601 பொ நாகரத்தினம், காரைநகர்; 602 வ. நா தப்பிராசா, சாம்பற்தீவு; 603 சி. செல்வராசா, வயாவிளான்;

(12-ம் பக்கம் பார்க்க)



பாட்டு வேண்டுமா உனக்கொரு பாட்டு வேண்டுமா?

ஆம்! இனிய சங்கீதத்திற்கும், அகில உலக நிகழ்ச்சிக்கும்

இன்றியமையாதது நாஷனல் ரேடியோ

இது மிகச்சக்தி வாய்ந்த ஏரியலும்;
எட்டு ட்ரான்சிஸ்டர்களும்;
இரு அலை வரிசைகளும் கொண்டது.
எனவே எவ்வித சலனமுமின்றி
தொலை நிகழ்ச்சிகளையும் கிரகிக்க
கூடியது.
இது ஆறு சாதாரண டார்ச் பாட்டரிகளில் ஆறுநூறு மணிக்கு மேல்
இயங்கும்.

National



DB 323

ஒரு வருட உத்தரவாதம்.

விலை ரூ. 295-00

மொடல் DB 323

ஏக விநியோகஸ்தர்கள்:-

எலெட் ரேடியோ & என்ஜினியரிங் கம்பெனி,
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

போன்: 79788

—MyjERBC—


## 'தமிழாசிரியர்களுக்கு எதற்கு சிங்களத் தேர்ச்சி? நிபந்தனையை வாபஸ் செய்யுங்கள்-அதுதான் முறை'

### கல்வி அமைச்சரிடம் அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம் வற்புறுத்து

"தமிழாசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? தமிழ் பேசும் பிள்ளைகளைத் தமிழ் மொழி மூலம் கற்பிக்கத் தமிழில் தேர்ச்சி பெற்று வந்த ஆசிரியர்களுக்கு சிங்களம் எதற்கு? பதவியை ஸ்திரப்படுத்த தமிழாசிரியர்கள் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையை வாபஸ் பெறுங்கள்" என்று அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி மந்திரியை வற்புறுத்தி யிருக்கிறது.

"அரசாங்க சேவைக்குரிய விதிகளைப் பிழைபட அர்த்தம் பண்ணிக்கொண்டு அவற்றைத் தமிழாசிரியர் தலையிலும் சுமத்தப்பார்க்கிறார்கள். தமிழாசிரியர்கள் வெள்ளைக்காரன் காலத்தில் கூட ஆங்கிலமே அரசகரும மொழியாக இருந்த சமயத்திலும் தமிழ்த் தேர்ச்சியோடுதான் கடமை பார்த்தார்கள். எஜமானனான வெள்ளைக்காரன் தன்னுடைய ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறும்படி தமிழாசிரியர்களை வற்புறுத்தவில்லை. நாடு அடிமைத் தளையில் சிக்குண்டு இருந்த காலத்தில் ஆண்ட வெள்ளையனே தமிழாசிரியர்களிடம் கேட்காத ஒன்றை இன்று சுதந்திர இலங்கையில், மக்கள் ஆட்சியில் இந்த மண்ணில் பிறந்தவர்களே கேட்கிறார்கள். அது மனித உரிமைக்கு மாறானது; அநீதியானது.

இப்படிச் சங்கம் சுட்டிக் காட்டி, தமிழாசிரியர்கள் தமது பதவியை ஸ்திரப்படுத்திக்கொள்ளச் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையை வாபஸ்பெற வேண்டும் என்று கல்வி மந்திரியை வற்புறுத்தியிருக்கிறது.

## தஞ்ச நகரத்து தண்ணீர் பஞ்சம்

தஞ்ச நகரத்திலும் அதற்கு அணித்தாயுள்ள கிராமங்களிலும் நீண்ட காலமாக நிலவி வந்த தண்ணீர்ப்பஞ்சத்தை தஞ்ச நகரத்து ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் சமீபத்தில் தோண்டப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட கிணறு தீர்த்து வைத்தது.

தஞ்ச நகரம் என்பது தென்னிலங்கையில் திஸமகாருமைக்கு அருகில் கதிர்காமம் செல்லும் வழியில் உள்ள ஒரு தமிழ்க் கிராமம் ஆகும். இங்குப் பிதன் அயலிலும் அரசினரால் சில கிணறுகள் தோண்டப்பட்டன எனினும் அவையனைத்திலும் உப்புத் தண்ணீரே கிடைத்ததால் குடிநீருக்காக மக்கள் கஷ்டப்பட்டனர். சுவாமி நாராயண குரு என்பார் பொது மக்களிடம் பணம் திரட்டி கோவிலில் கடந்த செப்டம்பர் மாதம் தோண்டி முடித்த கிணற்றில் நல்ல குடி தண்ணீர் கிடைக்கிறது இதை ஒரு வரப்பிரசாதமாகவே கருதுகிறார்கள் அங்குள்ள மக்கள்.

கோயில் பாழடைந்த நிலையில் இருக்கிறது அதைப் புனரமைக்க இப்போது முனைந்துள்ளார்கள். சுவாமி நாராயண குரு இதற்குப் பொது மக்களின் உதவியை எதிர்பார்க்கிறார்.

## கொழும்பில் இசைவிழா

இலங்கை சங்கீத நாட்டிய சங்கம் 4-ம், 5-ம், 6-ந் தேதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் இசைவிழா ஒன்றினை நடத்துகிறது.

விழாவில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள பல இசைக் கலைஞர்களுடைய வாத்திய இசை நிகழ்ச்சிகளும் வாய்ப்பாட்டு சங்கீதமும் இடம் பெறுகின்றன.

பிரவேசக் கட்டணம் இல்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இணுவில் முத்தமிழ் விழா

இணுவில் இளந்தாரி கோவிலடி சன சமூக நிலையத்தில் இம் மாதம் 5-ம் 6-ம் 7-ம் தேதிகளில் முத்தமிழ் விழா நடைபெறும்.

5-ம் தேதி இயல் விழாவிற்கு உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் தலைமை தாங்குவார் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. என் நவரத்தினம், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு எம். சிவசிதம்பரம், யாழ்ப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா ஆகியோரும் மற்றும் பலரும் பேசுவார்கள்.

தொடர்ந்து 6-ம் 7-ம் தேதிகளில் முறையே இசை விழாவும் நாடக விழாவும் நடைபெறும்.

## மாவிட்டபுரம் முத்தமிழ் விழா

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத்தின் ஆண்டு விழா இம்மாதம் 11, 12-ம் தேதிகளில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் வெகு விமரிசையாக நடத்தப்பட விருப்பதாக தெரிகிறது இதற்கான ஏற்பாடுகளை மன்ற நிருவாகிகள் வெகு ஜரூராகச் செய்து வருகின்றனர்.

ஆண்டு விழாவில் முதல் நாள் நாதஸ்வரக் கச்சேரிகளும், விசேஷ ஆராதனைகளிற்குப்பின் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளைக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும் நிகழ்ச்சியும் இடம்பெறும் எனத் தெரிகிறது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திருமறைக் கச்சேரி, கதாப்பிரசங்கம், நாதஸ்வரக் கச்சேரிகள், நடனங்கள், சொற்பொழிவுகள், பழந்தமிழர் பண்பாடு வீரம் போன்ற பல அம்சங்களை வெளிப்படுத்தும் கிராமிய நிகழ்ச்சிகள், பொய்க்கால் குதிரை ஆட்டம், அனுமன் ஆட்டம், வசந்தன் ஆகியன இடம் பெறும் எனத் தெரிகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மனுடைய நாடகத்தைப் பெரும் செலவில் அதிவிமரிசையாக நடாத்தவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று மாவிட்டபுரம் எஸ். டி. ஷண்முகானந்தக் குருக்கள் அறிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யதார்த்தம்! - அப்படி ஒன்று இலக்கியத்தில் கிடையவே கிடையாது!!

## முற்போக்கு, பிற்போக்கு என்றெல்லாம் பேசப்படுவதும் வெறும் புரட்டு

## கதை, கவிதை நூல்கள் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் மத்தியில் சோ. நடராஜா

(சுதந்திரன் நிருபர்)

"யதார்த்த இலக்கியம்...யதார்த்த இலக்கியம் என்றெல்லாம் கூப்பாடு போடுகிறார்கள். இலக்கியத்தில் யதார்த்தம் என்று ஒன்று கிடையாது.

"இப்படித்தான் முற்போக்கு...பிற்போக்கு என்றும் ஏதேதோ பேசிக்கொள்ளுகிறார்கள். இது என்ன என்று எவருக்கும் புரியவில்லை. எல்லாம் வெறும் புரட்டு" என்று நவாலியூர் சோ. நடராஜா கூறினார்.

யாழ்ப்பாணத்து திரு. வரதர் "கயமை மயக்கம்" என்ற சிறு கதைத் தொகுப்பு நூலையும், நாவற்குழியூர் நடராஜன் (இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு கே. எஸ். நடராஜா) "சிலம்பொலி" என்ற கவிதைத் தொகுப்பு நூலையும் அண்மையில் வெளியிட்டதையொட்டி கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்பின் போது பிரஸ்தாப நூல்கள் இரண்டின் விற்பனையையும் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே திரு. சோ. நடராஜா மேற்கண்டவாறு கூறினார்.

### தமிழகத்திலிருந்து இருவர்

'எழுத்தாளர் சந்திப்பு' முதலியார் குல சபாநாதன் தலைமையில் நடந்தது. தமிழகத்திலிருந்து வந்த 'கங்கை' ஆசிரியர் திரு பகீரதனும், 'சரஸ்வதி' ஆசிரியர் திரு. விஜயபாஸ்கரனும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

வரதரையும் நாவற்குழியூர் நடராஜனையும் தமக்கு நீண்ட காலமாகத் தெரியும் என்று கூறிய திரு சோ. நடராஜா இருவரதும் குணநலன்களையும் பண்புச் சிறப்புகளையும், நூல் நயங்களையும் எடுத்துரைத்து விட்டுத் தொடர்ந்து பேசியதாவது:-

### யதார்த்தம் இல்லை

"இப்போது புதிதாக ஒரு வார்த்தை உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதுதான் 'யதார்த்தம்' என்பது. இப்படி ஒன்று, இலக்கியத்தில் கிடையவே கிடையாது.

"ஆங்கிலத்தில் Realism என்று இருப்பதை இவர்கள் யதார்த்தம் என்று மொழி பெயர்த்து வைத்திருக்கிறார்கள். Realism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு உள்ள பொருளுக்கும், இவர்களுடைய யதார்த்தத்துக்கும் சம்பந்தமேயில்லை. யதார்த்தம் என்றால் உண்மை என்று சொல்லுகிறார்கள்.



திரு. நடராஜா

### "இலக்கியத்தில் உள்ளது போலி"

"இலக்கியத்தில் எங்கே இருக்கிறது உண்மை? உள்ளது போலிதான் நாம் நேரில் பார்க்கும் உருவத்தை இலக்கியத்தில் சமைத்தால், சமைக்கப்படுவது அசல் அல்ல; போலிதான். உள்ள ஒன்றைப் போல இன்னொன்று படைக்கப்படும் போது படைக்கப்படுவது பிரதி. எது காரணம் பற்றியும், நாம் எதைப் பார்த்து இதைப் படைத்தோமே அதாக இது இருக்க முடியாது. அது போல இது வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகலாம். அதனால்தான் போலி என்கிறோம்.

### நாயும் நாய்ப் படமும்

"இதற்கு ஒரு உதாரணம்! ஒரு நாயைக் காண்கிறோம். அதைப் போலக் கருமபலகையில் வரைகிறோம். ஆயின் நாம் வரைந்த படம் நாயாகிவிடுமா? இல்லை. நாயின் உருவத்தைத்தான் வரைந்தோம். இது நாயின் பிரதிபிம்பம் ஆகவே போலி. இதற்கு சமஸ்கிருதத்தில் ஒரு அழகான சுலோகமே இருக்கிறது. இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் யதார்த்தம் என்று கூப்பாடு போடுவது அறிவீனம்.

### முற்போக்கும் பிற்போக்கும்

"முற்போக்கு, பிற்போக்கு என்றெல்லாம் பேசப்படுவதும் இப்படித்தான். அர்த்தமே இல்லை. எல்லாம் வெறும் புரட்டு"—இவ்வாறு திரு சோ. நடராஜா கூறினார்.

### பிரச்சினை கிளம்பியது

திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில் பிரச்சினைக்குரிய சில விஷயங்களைத் தொட்டார். தமக்குப் பின்னர் பேசிய எழுத்தாளர் சிலருக்கு முன்னோடியாக, தமிழகத்துப் பத்திரிகை ஆசிரியாகள் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளாகளின் படைப்புகளை ஏற்றுப் பிரசுரிப்பதில்லையென்றும், தமிழகந்தான் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியை நசுக்கிக் கொல்

(9-ம் பக்கம் பார்க்க)



திரு. வரதர்

ஆரோக்கியாமிருதலேஹம்
நேர்வாளம்சேராத சுகபேதி
S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET COLOMBO 13

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்
கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்
முன்னணி வகிக்கிறது
லதா
கேம்பிரிக்
சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனு முதலியவைகளுக்கும் சிறந்தது.
இலங்கை முழுவதிலுமுள்ள புடவை வியாபாரிகளிடம்
கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்
குண்டன்மால்ஸ்
26, கெய்சர் வீதி, கொழும்பு.

தமிழகத்து

# "பத்திரிகை ஆசிரியர்கள் மீது பழி சுமத்துவது அபாண்டம்

## ஈழத்து சூழ்நிலையில் அமைந்த கதை திருப்பி அனுப்பப்பட்டிருந்தால் காட்டுங்கள் பார்க்கலாம்"

## எழுத்தாளர் கூட்டத்தில் பகீரதன் சவால்

(சுதந்திரன் நிருபர்)

தமிழகத்துப் பத்திரிகை ஆசிரியர்கள் ஈழத்து எழுத்தாளர்களின் கதைகளை ஏற்றுப் பிரசுரிக்கிறார்களில்லையே என்று ஈழத்திலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் சிலர் தமிழகப் பத்திரிகை ஆசிரியர்கள் மீது பழி சுமத்துவது அபாண்டம் என்று எடுத்துக் கூறினார் "கங்கை" ஆசிரியர் திரு. பகிரதன்.

"கயமை மயக்கம்", "சிலம்பொலி" ஆகிய சிறுகதை, கவிதை தொகுப்பு நூல்கள் வெளியிடப்பட்டதையொட்டிக் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற "எழுத்தாளர் சந்திப்பு" கூட்டத்தில் கலந்து கொண்ட திரு பகீரதன், அங்கு பேசிய சிலர் எழுப்பிய பிரச்சினைகளுக்கு பதிலிறுத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

### பகீரதன் சவால்

"இலங்கைச் சூழ்நிலையில், இலங்கைக்குப் பெருமை அளிக்கக் கூடியதும், தமிழ்ச் சிறு கதை இலக்கியத்துக்கு ஆக்கம் தரக்கூடியதுமான எந்த ஒரு கதையாவது இங்குள்ள எவராவது தமிழகத்துப் பத்திரிகை எதற்கேனும் அனுப்ப, அது திருப்பி அனுப்பப்பட்டது உண்டா? அப்படி நடந்திருந்தால் அதைக் காட்டுங்கள். அந்தக் கதையை என்னிடம் கொடுங்கள். எந்தப்பத்திரிகைக்கு நீங்கள் முன்னர் [illegible] பத்திரிகையில் உங்கள் கதை வெளிவரச் செய்கிறேன்" என்று திரு பகீரதன் சவால் விட்டார். (குற்றம் சாட்டிப் பேசியவர்களோ அன்றிக் கூடியிருந்தவர்களோ அப்படித் திருப்பி அனுப்பப்பட்ட கதை ஒன்றுதானும் இருப்பதாகச் சொல்லவில்லை)



திரு. பகீரதன்

திரு பகீரதன் தொடர்ந்து பேசினார். அவர் கூறியதாவது:—

### நாம் வளர வேண்டும்

"மற்றவர்களைக் குறை சொல்வதற்கு முன்னால் நம்மை நாம் திருத்திக் கொள்ள வேண்டும்; உயர்த்திக் கொள்ளவேண்டும். நமது கதைகளை மற்றவர்கள் ஏற்கிறார்கள் இல்லை என்று சொல்வதற்குப் பதிலாக கதைகளை அவர்கள் கேட்டுப் பெற்றுப் பிரசுரிக்குமளவுக்கு நாம் வளர்ச்சி பெற வேண்டும். அதுதான் கௌரவம்.

### ஈழத்துச் சூழ்நிலையில் எழுதுங்கள்

"ஒவ்வொருவருக்கும் அவரவர் நாடுதான் பெரியது. ஈழத்திலுள்ள நீங்கள் ஈழத்துக்குப் பெருமை தரக்கூடியதாக எழுத வேண்டும்; ஈழத்துச் சூழ்நிலையை அடிப்படையாக வைத்து எழுத வேண்டும். அதை விடுத்து சென்னையையும் தஞ்சையையும். பம்பாயையும் வைத்து எழுதித் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்கு அனுப்புவதில் ஈழத்துக்கு என்ன பயன்?

### நல்ல சரக்குக்கு வரவேற்பு

"தமிழ் நாட்டிலுள்ள பத்திரிகாசிரியர்கள் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளை வெறுக்கவுமில்லை; ஒதுக்கவுமில்லை. நல்ல சரக்கு எங்கிருந்து கிடைத்தாலும் அதை அவர்கள் ஏற்கத் தயாராக இருக்கிறார்கள்.

### சரஸ்வதி

"எழுதுவதை யெல்லாம் எல்லாப் பத்திரிகைகளும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விளைவுகளைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை; நியாயத்தின் பேரிலேதான் நாம் போராடுகிறோம்"—நாகநாதன்

## கத்தோலிக்கரின் நியமனப் பத்திரத்தில் இந்துக் குருக்கள் கையொப்பம்

பாராளுமன்றப் பக்கவாட்டுப் பாணங்களில் ஒரு சிறு காட்சியைச் சுடந்த வாரம் கண்டோம்.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் மசோதாவில் பக்கவாட்டுப் பாணங்கள் இரண்டு கட்டங்களில் பெரிதும் சோபித்தன. இரண்டிலும் பிரதம பாத்திரம் 'இரும்பு மனிதன்'தான் மேறபடி விவாதத்தில் அவர் ஓர் அருமையான பிரசங்கம் சுமார் 2½ மணித்தியாலம்வரை நிகழ்த்தியிருக்கிறார். அதிலிருந்து ஒரு சிறு அம்சம் இதோ:

"......தேர்தல் காலத்தில் நல்லூருக்குப்போயிருந்த பொழுது அங்குள்ள மிகப் பெரிய கோவிலின் பிரதம முகாமைக்காரரைச் சந்தித்தேன். "தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்விற்காக உழைப்பதும் அவர்கட்கு சம உரிமை கிடைக்கும்வரை போராடுவதுமே எனது முதற் கொள்கை" என்று அவரிடம் கூறினேன். "எந்த வித ஏற்றத் தாழ்வுகளையும் நாம் அனுமதிக்க முடியாது"

அவைப் புரு

என்று தொடர்ந்தேன். அப்போது முகாமைக்காரர் நான் தெய்வ நிந்தனை செய்வதாகக் கூறினர். ஆனல் இரண்டு மணித்தியாலச சம்பாஷணையின் பின் அவர் எனது தரப்பு நியாயத்தை அப்படியே ஏற்றுக்கொண்டார். அத்துடனில்லாது, எனது தேர்தல் நியமனப் பத்திரத்திலும் கையொப்பமிட்டார்......நான் இவரைச் சந்திக்கப் போகுமுன் எனது நண்பர்கள் என்னை எச்சரித்தார்கள் "அங்கேபோகாதே. அந்த முகாமைக்காரருடன் நடந்துகொள்ளுவதற்கு அசாதாரண சாதுரியம் தேவை. வெங்கலக் கடையில் யானைபோல நடந்து கொள்ளாதே" என்றார்கள். ஆனல் தோல்வி பற்றி நான் பயப்படவில்லை. நான் போனேன். சலுகை குறைந்த மக்களின் சமத்துவத்திற்காக நியாயம் பேசினேன். இவர்களின் சமஉரிமைக்காக வாதிட்டேன். (வெற்றி கண்டேன்!)"

ஃ

"......இலங்கைப் பாடசாலைகள்பற்றி எனக்கெதுவும் தெரியாது என்றார்கள். நான் 9 வயதாயிருக்கும்போதே இலங்கையைவிட்டு வெளிநாடுகளுக்குப் போக வேண்டியதாயிற்று. என் சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலை அது. இருந்தும் அந்த 9 வருடங்களுக்குள்ளும் சுண்டிக்குளி பெண்கள் பாடசாலையில் நான் ஒரு பழைய மாணவன்........."

ஃ

"......மாணவர்கள் கெட்டிக்காரர்களாயிருக்கும் பாடசாலைகளுக்கு அந்த நாட்களில் அதிகப்படியான அரசினர் உதவி நன்கொடை கிடைக்கும். இந்தத்துறையில், நான் படித்த பாடசாலைகளின் ஆக்கத்திற்கு எனது தாழ்மையான தொண்டைச் செய்ய நான்

**பாராளுமன்றத் துணுக்குகள்**

தவறவில்லை.........நானும் எனது நண்பர்கள் சிலரும் 2ம், 3ம், 4ம், 5ம் வகுப்புகளில் முதல் நிலைப் புள்ளிகள் பெற்று ஒவ்வொரு பாடத்திலும் 'திறமை சித்தி' பெற்றிருக்கிறோம். அந்தக்காலத்தில் பாடசாலைப் பரிசோதகர் ஒரு 'நாய்—வண்டி'யில் வருவார். அவர் ஒரு பறங்கிக்காரர். பெயர் வான்கியூலென்பேக். எனது வகுப்பைப்பற்றி அவர் விசேட கணிப்புக் காட்டினர். இதனல் எங்கள் பாடசாலைக்கு அதிகப்படியான நன்கொடை கிடைத்தது!......"

ஃ

**"தாழ்த்தப்பட்டவர்கள்"**

"......எங்கள் கட்சி பற்றி ஒரு வார்த்தை. சமயத்தை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் தேர்தலில் போட்டியிடவில்லை. இந்த ஒன்றை எங்கள் கட்சி என்றுமே செய்ததில்லை. உண்மையை ஆதரித்து வந்திருக்கிறோம் நாங்கள்; சில அரசியல் கொள்கைகளைப் பின்பற்றி வந்திருக்கிறோம். எனது பாராளுமன்றத் தொகுதி 98% இந்துக்கள் வாழுமிடம். இந்து வைதிகத்தின பிறப்பிடம் நல்லூர். மிகப்பெரிய இந்து ஆலயங்கள், சமய நிறுவனங்கள், இந்துப் பாடசாலைகள் அனைத்தும் எனது தொகுதியில் இருக்கின்றன. இருந்தும் நான ஒரு இந்து அல்ல என்று இம்மக்களுக்கு கூற நான் பயந்ததில்லை. அத்துடன் (இந்து சமூகத்திலிருக்கும்) தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் உரிமைகளுக்காகப் போராட நான் தயாராயில்லை என்றுவது நான் கூறியதும்கிடையாது. பூரண சம அந்தஸ்துப் பெற்று இம்மக்களும் ஏனைய இந்துக்களுடன் சரிநிகர் சமானமாகக் கெளரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழ, எமது கட்சி குறிப்பாகப் போரிடுகிறது. வருத்தத்துடன் கூறுகிறேன்; என்னுடன் போட்டியிட்ட பிரமுகரும்—தேர்தல் காலத்திலாவது—தான் ஒரு பெரிய இந்து என்று வேஷம் போட்

(12-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தம்பி.. வன்னியசிங்கம்

## ஆசை வசப்பட்டு ஒருபோதும் தன்னை இழக்காதவர்

**கா**லஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேச லிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் எட்டாவது பகுதி இது.

[முற்றொடர்]

ஆங்கில இலக்கியத் தொடர்பாக எழுந்த ஒரு கட்டுரையே முதல் முதல் வன்னியசிங்கமும் நானும் தந்தையாரின் அடிமனத்தின் ஆழத்தில் சித்தாந்த நுண்பொருள்கள் பயின்று கிடந்தன என்பதை அறியும்படி செய்தது.

ஆங்கிலப் புலவரான டென்னிஸன் பிரபு (Lord Tennison) எழுதிய "ஆர்தரின் மறைவு" என்ற நூல் (Passing of Arthur) வன்னியசிங்கத்துக்கோ தம்பிக்கோ ஜூனியருக்கோ ஸீனியருக்கோ பாடப் புத்தகமாக விதிக்கப்பட்டிருந்தது. தகப்பனார், யாழ்ப்பாணம் பொது வாசிகசாலையிலிருந்து டென்னிஸன் எழுதிய ஆர்தர் மன்னன் விஷயமான கதைகள் அனைத்தும் அடங்கிய "வட்ட மேசை பற்றிய கதைகள்" (Idylls of the Round Table) என்ற நூலை எடுத்து வந்து பிள்ளைகள் எல்லாரும் வாசிக்கும்படி கொடுத்தார்; வசதியான நேரங்களில் தாமும் வாசித்தார். அந்நூலில் விவரிக்கப் பட்டிருந்த ஒரு சம்பவமும், அதை விவரிப்பதில் கவிஞர் உபயோகித்திருந்த சொற்கள், சொற்றொடர்களும் சைவசித்தாந்த உண்மைகள் சிலவற்றை அவருக்கு நினைவுறுத்தி யிருக்க வேண்டும்.

### இந்து சாதனத்துக்கு கட்டுரை

கவிஞர் அந்தச் சம்பவத்திலுல் குறிப்பாக விளக்கிய உண்மைகளையும் சித்தாந்த உண்மைகளையும் ஒப்பிட்டு அவை வேருகாமை காட்டி ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதி ஆங்கில இந்து சாதன பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார் தந்தையார் (27—35 ஆண்டுகட்கு முன் படித்த விஷயம் மனதில் எத்துணை ஆழமாகப்பதிந்ததாயினும் ஞாபகக் குறைவால் விவரங்களில் சிறு பிழைகள் இருக்கக் கூடும். வாசக நேயர்கள் மன்னித்தருள்க. கட்டுரைக்கும் இது ஒக்கும்) விஷயம் இது.

### 'இதில் அமர்ந்தவன் தன்னை இழப்பான்'

ஆர்தருக்கு நீதியை நிலைநாட்ட அவருக்கு உதவியாக இருந்த வீரத்துணைவர்களும உணவு கொள்ளும் வட்ட மேசையருகில் இருந்த ஆசனங்களுள், ஒன்று மாய சக்தி வாய்ந்தது; மந்திரவாதி மேர்லினுல் நிருமிக்கப்பட்டது. "இதில் அமர்பவன் தன்னை இழப்பான்" என்று அந்த ஆசனத்தில் எழுதியிருந்தது. தன்னை இழக்க எவரும் அதில் அமர்வதில்லை. ஒரு நாள் மேர்லினே மறதியால் அதில் அமர்ந்து விட்டான். அப்புறம் மேர்லினை யாரும் கண்டதில்லை.

### மேர்லினும் விவியெனும்

அதிக்கிரமங்கள் செய்து வாழ்வோருக்குத் தலைவனை ஒருவனது ஏவலால் "விவியென" என்பாளொரு மோகினி,தான் அநாதையெனக் கூறிவந்து ஆர்தர் மாளிகையில் அடைக்கலம் புகுந்து, பலரைக் குறித்தும் அவர் தூற்றுவதும் சிலரைத் தன் விழிவலையில் சிக்க வைத்து அவர் ஒழுக்கத்துக்குக் கேடு விளைப்பதுமாய் மெல்லப் பாவத்தைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டிருந்தாள். இவள் கிழவனும் மாயம் வல்லவனுமான மேர்லினையே தன் மாயவலையில் அகப்படுத்த முனைந்தாள். தான் காதலிற் சிக்குவது நடவாத காரியம் என்ற நினைவினுல் அவளது சரச விளையாட்டுகளை வெறும் விநோதமாகவே எண்ணி அவற்றில் ஈடுபடத் தொடங்கிய மேர்லின் தன்னை யறியாமலே அவள் காதல்வலையில் சிக்கலானான். ஒரு நாள் அவனை வனவிளையாட்டுக்கு என்று அழைத்துப்போன விவியென் அங்கு தன் ஜாலமெல்லாம் பிரயோகித்து அவனை மயக்கி ஒருவரைப் பிறர் காண முடியாதபடியும் அவர் ஒரு அடிதானும் நகர முடியாதபடியும் சிறை வைக்கும் மாயமந்திரத்தைத் தனக்குச் சொல்லித் தருமாறு கேட்டாள். முதலில் மறுத்த மேர்லின் பிறகு அவள் விழிவலையில் கட்டுண்டு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்து விட்டான். அவள் மேர்லினையே அந்த மந்திரத்தால் கட்டிப்போட்டு விட்டு அரண்மனைக்கு மீண்டாள்.

### 'என்னை இழந்தால் நான் உய்வேன்'

மாயங்கள் தந்திரங்கள் வல்லவனயிருந்தும் மனத்தூய்மை இல்லாமையால் மேர்லின் பெண்ணாசையால் தன்னை மறந்து இம்மை மறுமைப் பயனை இழந்து இறந்தொழிந்தான்.

மேர்லின் மறைந்து சில மாதங்களான பின் கலகாட் எனப் பெயரிய மனந்தூய இளவீரன், "என்னை இழந்தால் நான் உய்வேன்" என்று கூறிக்கொண்டே மாய ஆசனத்தில் அமர்ந்தான். அச்சமயம் மற்ற வீரரும் ஏனைய ஆசனங்களில் இருந்தனர். புதுவீரன் மாய ஆசனத்தில் அமர்ந்ததும் மங்கல இசையும், நறுமணப் புகையும், கண்கூசும்பேரொளியும் மண்டபத்தை நிரப்பலாயின. ஏதோ தெய்வீகம் என எழுந்து வணங்கிய எல்லோரும் ஒளியைத்தாங்கும் ஆற்றலில்லாதவராய்க் கண்களை மூடிக்கொண்டனர். கலகாட் மட்டும் காண அந்தரத்தில் மிதந்து வாயில வழியாக அம்மண்டபத்துட்புகுந்து கிறிஸ்து நாதரின் புனித இரத்தம் தாங்கிய பரிசுத்தப் பொற்கிண்ணம் மெல்லிய துகில் திரையால் மறைக்கப்பட்டு மண்டப மத்தியில் ஆகாயத்தில் நின்று அவனுக்குத் தரிசனம் தந்தது.

### பொற் கிண்ணம் மறைந்தது

மனங்குளிர அதை வணங்கிய பின் அதன் ஸ்பர்லத்தால் பாவம் தீர எண்ணி கலகாட் கைநீட்டிய அளவில் அது வந்த வழியே திரும்பிச் செல்லத் தொடங்கியது. திசைத்[illegible] சிறிது நேரம் [illegible] இழந்து நின்ற கலகாட் உணர்வு வரப்பெற்றபோது அது மறைந்து விட்டது. சொல்லொணுத் துயருற்ற கலகாட் தான் அதைத் தேடிப் புனித யாத்திரை தொடங்குவதென்றும் அதனைத் திரை மறைவின்றி நேரில் கண்டன்றி ஒரு வருட காலத்துள் ஓய்ந்திருப்பதில்லையென்றும் சத்தியம் செய்தான். அவனைப் பின்பற்றி மற்றையோரும் அவ்வாறே சத்தியம் செய்தனர்.

### தகுதியுள்ளோர் தரிசனம் பெறுவர்

வேட்டைக்குப் போயிருந்த ஆர்தர் திரும்பி வந்ததும் எல்லோரும் புறப்படத் தயாராவதைக் கண்டு காரணத்தை யறிந்து "ஏன் இப்படிச் சத்தியம் செய்தீர்கள்?" என்று கடிந்து கொண்டார். நடந்ததை யெல்லாம் விவரமாகக் கூறி முடிவில் "அரசே! தாங்களும் இங்கிருந்தால் இவ்வாறே சத்தியம் செய்திருப்பீர்கள்" என்று அவர்கள் கூறியதை மட்டும் அவர் ஒப்பவில்லை." தகுதியிருந்தால் இங்கிருந்து தரிசனம் பெற்றிருப்பேன். எனக்குத் தகுதியில்லை. உங்களில் தரிசனம் பெற்றவர் யார் யார்?" என்று விசாரித்து கலகாட் ஒருவனுக்கே தரிசனம் கிடைத்தத என்பதை அறிந்து கொண்டார். "கலகாட ஒருவனே புனித யாத்திரைக்கும் தகுதி வாய்ந்தவன் மற்றவர்கள் நீதியை வீரத்தால் நிலைநாட்டும் தகுதிமட்டும் உடையவர்களேயன்றி தவம் தியானம் செபம் ஆதியனவைகளில் ஈடுபடும் தகுதி இல்லாதவர்கள். நீதியை நிலைநாட்டும் தொண்டே நமக்கெல்லாம் நற்கதி அளிக்கும். நான் இங்கு இருந்தால் மற்றவர்களையெல்லாம் சத்தியம் செய்யாதபடி தடுத்திருப்பேன். சத்தியம் செய்தாயிற்று போய்வாருங்கள்" என்று விடை கொடுத்து அனுப்பினுர்.

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A. (Hons), (Lond) M. Litt

### மோட்ச உலகை அடைதல்

கலகாட் யாத்திரை தொடங்கிய இரண்டொரு நாளிலேயே புனிதப் பொற்கிண்ணம் மென்துகில் திரையால் மறைக்கப்பட்ட நிலையில் அவனுக்கு மீண்டும் காட்சி தந்து இரவும் பகலும் கண் எதிரிலேயே இருந்து வழிகாட்டிச் செல்லலாயிற்று. அவ்வாறு வழிகாட்டப் பெற்று கலகாட் வழியில் பற்பல புண்ணியங்களைச் செய்தும் அற்புதங்களைக் கண்டும் புனித யாத்திரையைத் தொடர்ந்து ஈற்றில் திரை விலகிப் புனிதப் பொற்கிண்ணத்தை நேரே தரிசித்து மேலும் அதைத் தொடர்ந்து மோட்ச உலகை அடைந்தான்.

### ஆர்தரின் முடிவு

ஏனையோர் பலவாறு அலைந்து பாதியில் புனித யாத்திரையைக் கைவிட்டு ஆங்காங்கு உலகவாழ்வில் அமர்ந்தனர். நீதியை நிலைநாட்டுவாரின்றி ஆர்தரது இராச்சியம் புகழும் வலியும் குன்றலாயிற்று. ஈற்றில் ஆர்தரும் போரில் பகைவரால் தோற்கடிக்கப்பட்டு மரணகாயம் அடைந்து விசுவாசம் (Faith), நம்பிக்கை (Hope), தர்மம் (Charity) என்ற மூன்று கன்னியரால வள்ளம் ஒன்றில் ஏற்றப்பட்டு, மாருத வசந்தம் நிலவும் ஒரு தீவில் சிகிச்சை பெற அழைத்துச் செல்லப் பட்டார்.

### தன்னை இழப்பவன் தாழ்வை அடைவான்

இதில் "தன் இழப்பு" என்ற விஷயமே தந்தையாரது சிந்தனையைத் தூண்டி விட்டது. "மண், பெண், பொன், மது, சூது இவற்ருலும் மனிதன் தன்வசம் ஒழிந்து தன்னை இழக்கிருன். இப்படி ஆசை வசப்பட்டுத் தன்னை இழப்பவன் இம்மை மறுமை இரண்டிலும் துன்பத்தில் ஆழ்கிருன். மனம் தூயனாய் பிரபத்தியில் தன்னை இழப்பவன் தெய்வ தரிசனம் பெற்றுச் செல்கதி காண்பதால் இம்மை மறுமை வீடு என்ற மும்மையும் அடைந்து ஈடேறுகிருன். தன்னை இழக்காதவன் தனக்கு வாழ்வில் அமைந்த கடமையாகிய சுவதர்மத்தில் ஊன்றி அதைச் சரிவரச் செய்தலே அவனுக்கு நற்கதி தரும். அதை விடுத்துப் பிரபத்தி மார்க்கத்தில் புகுந்தால் இரு வழியும் இழந்து திண்டாடுவன் என்பது டென்னிஸன் கூறிய சம்பவத்தால் அறியப்படும் உண்மை.

### மணிவாசகர் வேண்டுதல்

"வான் கெட்டு......, ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு என் உள்ளமும் போய், நான் கெட்டவா" என்று பிரபத்தியில் தன்னை இழந்தமை கூறிக் குதூகலிக்கிருர் மாணிக்க வாசக சுவாமிகள். "செத்தே போனுற் சிரியாரோ?" என்றும் "அத்தா, செத்தே போயினேன்" என்றும் வருந்தும் மாணிக்க வாசக சுவாமிகளே "இன்னும் செத்திலேன் அந்தோ" என்று இரங்கி "என்னைச் செத்திடப் பணியாய்" என்றும் வேண்டுகிருர். சாவும் இருவகைத்து. திருவாதவூரடிகள் விரும்பாத சாவு—தன்னிழப்பு—"பெரு நோய்கள்

(10ம் பக்கம் பார்க்க)


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது!

**உஷா தையல் மெஷின்களே**



★ மாதந் தவணைக் கட்டணங்களில பெற்றுக் கொள்ளலாம்.

★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

சோல் ஏஜண்டுகள்:

**ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,**

88 A, மெயின் வீதி, கொழும்பு-11.

போன்: 4248, 5060.

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுகிறது.



**தபாற் தந்தி தலைவர் நியமனம்**
**பரீட்சை ஜனவரி 1961.**

இப்போட்டிப் பரீட்சையில் ஒரே முறையில் சித்திபெற்று அரசாங்க சேவையில் சேர வேண்டுமானுல், எமது பரீட்சைத் துணை நூல்களை வாங்கிப் படியுங்கள். பரீட்சைக்கு வரக்கூடிய வினு விடைகளை மட்டுமன்றி, பரீட்சைக்கு எப்படி விடை எழுதவேண்டும் என்னும் விளக்கவுரைகளையும் கொண்டன.

தமிழ்ப் பாஷை ● எண் கணிதம்
பொது விவேகம் ● பூமிசாஸ்திரம்
சரித்திரம் ● பொது அறிவு
ஆங்கிலம் ● 101 நவீன வியாசங்கள்

ஒவ்வொரு புத்தக விலை ரூபா 5-00.

தபாற் செலவு 35 சதம். வி. பி. பி இடையாது.

இலவச விபரங்கட்கு:-

[illegible] ஹேறால், 723, மருதானை, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1960 நவம்பர் மாதம் 6-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.


## ஐந்தாம் படை ஆபத்து

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றால் அதனால் எத்தகைய ஆபத்துக்கள் தமிழினத்தின் மீது கவிந்து சூழக் கூடும் என்று நாம் எதிர்பார்த்தோமோ அந்த ஆபத்துக்களில் முதன்மையானது இப்போதே—அதாவது அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்பதற்கான மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுமே—தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றால் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மொழி வலிந்து புகுத்தப்படும் என்று நாம் அஞ்சினோம். அப்படி நடந்தே தீரப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன. தமிழ் மாணவர்களிடம் மட்டுமல்ல தமிழ் ஆசிரியர்களின் வாய்க்குள்ளேயே தனிச் சிங்கள மொழி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படப்போகிறது.

'அரசினர் தமிழ் பாடசாலைகளில் உத்தியோகம் ஏற்கும் புது நியமனத் தமிழ் ஆசிரியர்கள் வருங்காலத்தில் அரசாங்க மொழியாகிய சிங்களத்தில் தேர்ச்சி பெற்றேயாக வேண்டும்' என்று கல்வி இலாகா அணிமையில் நிபந்தனை விதித்து விட்டது!

பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பது நல்லதுதானே என்று ஆராய்வின்மையாலும், அறியாமையினாலும் ஆர்ப்பரித்த தமிழ் ஆசிரியர்கள் சிலர் இப்போதுதான் பரக்கப் பரக்க விழிக்கிறார்கள். அடடா, ஆபத்து வந்ததே என்று அங்கலாய்க்கிறார்கள்; அலறித் துடிக்கிறார்கள்!

அரசாங்கத்தின் மேற்படி நிபந்தனையை ஆட்சேபித்து அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்மூதுக்கு ஒரு விளக்கமான மகஜரைச் சமர்ப்பித்துள்ளது.

தனித் தமிழ் படித்த வாலிபர்களுக்கு இது காலவரை இருந்து வந்த ஒரேயொரு சிறந்த தொழிலான ஆசிரியத் தொழிலுக்கும் சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் பேரிடர் வருவது கண்டு காலதாமதமின்றி விழிப்போடு தமது எதிர்ப்பைத் தெரிவித்த அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினரைப் பாராட்டுகின்றோம். அவர்கள் மட்டுமல்ல, ஏனைய ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்று திரண்டு எழுந்து நின்று இப்பொதுப் பிரச்சினையில் தமது கூட்டு வலிமையைப் பிரயோகித்து அரசாங்கத்தின் நியாயமற்ற இந்த எதேச்சாதிகாரப் போக்கை இறுதிவரை உறுதி குலையாது எதிர்த்தே தீரவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறுகின்றோம்.

புதிய நியமனம் பெறப்போகிற ஆசிரியர்களை மட்டுந்தான் மேற்படி நிபந்தனை பாதிக்கப் போகிறது என்று எண்ணிக்கொண்டு பழைய ஆசிரியர்கள் நிர்க்கவலையாய் இருந்துவிடக் கூடாது. ஏனெனில் இன்னும் சில காலத்தில் சேவையில் கூடிய பழைய தமிழ் ஆசிரியர்களும் சிங்களம் படித்துத்தான் ஆகவேண்டும் என்று அரசாங்கம் மேலும் ஒரு புதிய நிபந்தனையை விதிக்காது என்று நம்பியிருக்க ஆதாரமோ, அரசாங்க உறுதி மொழியோ எதுவும் இடையாது. இந்த உண்மையை ஆசிரியர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

"எல்லாத் தமிழாசிரியர்களுக்கும் சிங்களம் தெரிந்திருக்க வேண்டும். தெரியாதவர்களுக்கு சம்பள உயர்வு இடையாது" என்று கல்வி இலாகா எந்தச் சமயத்திலும் கூறலாம். எனவே ஆசிரியர்கள் முன்எச்சரிக்கையோடு தமது எதிர்ப்பை இப்போதே பலப்படுத்த வேண்டியது அவசியம்.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றால் தமிழ் ஆசிரியர்களும், தமிழ் மாணவர்களும் சிங்களத்தைக் கட்டாய பாடமாக ஏற்றுப் படிக்க வேண்டும் என்பதை விட, தமிழ்ப் பிரதேசத்துக்கும், தமிழ் இனத்துக்குமே மிகப் பெரிய ஆபத்து வேறொன்று விளையப் போகிறது. அது ஒரு பயங்கரமான 'ஐந்தாம் படை' ஆபத்தாகும்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப் பேற்றதும், சிங்கள வாலிபர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் முகமாகவும், அதே வேளையில், அரசாங்கத்தின் அந்தரங்க ஒற்றர்களாய் அவர்கள் இயங்கும் முகமாகவும், தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலையிலும் இரண்டு மூன்று என்று எஸ் எஸ். ஸி. தேறிய சிங்கள வாலிபர்கள் சிங்கள ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

இவர்கள் தமிழ்ப் பாடசாலைகளிலும், தமிழ்க் கிராமங்களிலும் உட் புகுந்து கொண்டதும் நடக்கப் போவது என்ன?

தமிழ் ஆசிரியர்களுக்குள் கோஷ்டி பிரியும்படி செய்வார்கள். அரசாங்கத்துக்கு ஆதரவான கோஷ்டி ஒன்று; அரசாங்கத்தை எதிர்க்கும் கோஷ்டி மற்றொன்று என்று பிளவு ஏற்படும் அரசாங்கத்தை ஆதரிக்கும் கோஷ்டியில் உள்ள ஆசிரியர்கள் யார் யார் என்று வேவு பார்த்து மேலிடத்துக்குத் தெரிவிப்பார்கள். அரசாங்கத்துக்கு ஆதரவான ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு, சம்பள ஏற்றம், நல்ல இடங்களுக்கு மாறுதல் போன்ற சலுகைகள் விரைவில் கிடைக்கும். அரசாங்கத்தை எதிர்க்கும் ஆசிரியர்கள் அலட்சியப் படுத்தப்பட்டு, நிஷ்டூரப் படுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். இப்படியான செயல்களின் மூலம் அரசாங்கம் 'துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்' செய்து தன்மானமுள்ள தமிழாசிரியர் சமூகத்தை நசித்து மிதித்துத் தன் கால் அடிக் கீழ்க் கொண்டுவர முற்படும்.

ஆபத்து அவ்வளவோடு முடிந்து விடாது. ஒவ்வொரு தமிழ்க் கிராமத்திலும் உளவு வேலை நடைபெறும். யார் யார் அரசாங்கத்துக்கு ஆதரவாய் இருக்கிறார்கள். யார் யார் அரசாங்கத்துக்கு எதிர்ப்பாய் உள்ளார்கள் என்று புள்ளி விவரம் திரட்டப்படும். அரசாங்கத்தின் அட்டூழியங்களை எதிர்க்கும் தமிழ்த் தலைவர்களின் நடமாட்டங்கள், செயல் திட்டங்கள், கட்சி அமைப்பின் இரகசியங்கள் எல்லாம் வேவு பார்த்து அரசாங்கத்துக்கு விவரம் சமர்ப்பிக்கப்படும். அதன் மூலம் அரசாங்கத்துக்கு ஆதரவாயுள்ள சுயநலமிகளை ஒன்று சேர்த்து, அத்தகைய விபீடணர்களின் ஒத்தாசையுடன், விரோதமாயுள்ளவர்களை மட்டந்தட்டிச் சுலபமாகச் சுதந்திரக் கிளர்ச்சியை மூளையிலேயே கிள்ளியெறிய அரசாங்கத்துக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

அரசாங்கம் தமிழ்ப் பகுதியிலுள்ள பாடசாலைகளையெல்லாம் கையேற்பதன் மூலம் தமிழ்ப்பேசும் மக்களுக்கு விளையப் போகிற வேதனை, தமிழ் பிரதேசத்துக்கு வரப்போகிற பேராபத்து சமான்யமானதல்ல. அரசாங்கத்தின் "ஐந்தாம் படை" திட்டமிட்டுத் தமிழ்ப் பிரதேசத்துள் புகுத்தப்படப் போகிறது. இதனால் விளையப் போகின்ற அனர்த்தங்களைத் தமிழ் பேசும் மக்கள் விரைவில் உணரத்தான் போகிறார்கள்.

காலதாமதம் நம்மை மேலும் பலவீனர்கள் ஆக்கப் [illegible] தடுத்து நிறுத்த நம் [illegible] காட்டப் போகிறார்கள் என்பதையே ஈழத் தமிழகம் ஆவலோடு எதிர்நோக்கி நிற்கிறது.

---

இருள் அகன்ற ஆபிரிக்கா: (2) நைஜீரியா: (iii)

# இராச்சியத் துணுக்குகளிடையே வேற்றுமைத் தூண்கள்

## மாறுபாடுகளுக்கிடையில் ஒற்றுமைகாணும் நைஜீரிய இணைப்பரசின் பரிணமம்

## "எமக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியம் இன்னொருதருக்கு ஏற்படவேண்டாம்!"

(3)

**செ. குமாரசாமி**

மேற்கு ஆபிரிக்காவில் அமமைக் கரையோரத்தில் நடந்து வந்த அடிமை வியாபாரத்தை நிறுத்து முகமாக பிரிட்டிஷ்காரர் 1861-ல் லாகோஸ் இல் இறங்கிஒரு காலனியை ஏற்படுத்தினார்கள். இங்கிருந்து கடலோரமாகக் கிழக்கே கலாபார் பட்டினம் வரை பிரிட்டிஷ் குடியேற்ற ஆதிக்கம் பரவிற்று. பின்னர் நைகர் நதிக்குக் கிழக்கேயுள்ள (இன்றைய) கிழக்கு நைஜீரியாவில் மூன்றாவதாக இன்னுமொரு இராச்சியம் உருவாக்கப்பட்டது நைகர் நதிக்கு மேற்கேயுள்ள யொருபா நாட்டில் நிகழ்ந்து வந்த உள் நாட்டுக் கலகங்களை நிறுத்தி, சமாதானம்ஏற்படுத்தி வைக்க பிரிட்டிஷ் மத்தியஸ்தம் முன்வந்தது, இதைத் தொடர்ந்து மெல்ல மெல்ல (இன்றைய) மேற்கு நைஜீரியாவில் இன்னுமொரு பிரிட்டிஷ் இராச்சியம் உருப்படலாயிற்று இந்த இராச்சியத்துணுக்குகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 'தென் நைஜீரிய காவற் பிரதேசம்' என்ற ஒரே இராச்சியம் உருவாக்கப்பட்டது என்பதைக் கடந்த வாரம் கண்டோம்.

### தென் நைஜீரியாவின் பரிணமிப்பு

அன்னிய நாட்டவர்களால் ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள இன்னுமொரு தேசத்தில் இவ்வாறு ஒரு இராச்சியமும் நாடும்தோற்றுவிக்கப்படுவது எண்ணிறந்த பிரச்சினைகளைக் கிளப்பி விட்டிருக்கிறதைப் பின்னால் கவனிப்போம். அதற்கிடையில், இத்கனையுஞ் சாதித்த றோயல் நைகர் கம்பெனியை பிரிட்டிஷ் அரசாங்கம் பொறுப் பேற்றுக் கொண்டது. அதாவது இந்த தென் நைஜீரிய காவற் பரதேசம் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டு விட்டது. 1861-ல் அடிமை வியாபாரத்தை நிறுத்தப் புறப்பட்ட பிரிட்டிஷ்காரன் 1906-ம் ஆண்டுடன் தென் நைஜீரியாவை அடிமைப்படுத்தும் பணியில் நைஸாகவெற்றி கண்டுவிட்டான்!

### வட நைஜீரியாவின் வளர்ச்சி

வட நைஜீரியாவின் கதி என்ன?

துண்டுத் துண்டு இராச்சியங்களாக சிற்றரசர்கள் பலர் ஆட்சி செய்து வந்த பிரதேசம் வட நைஜீரியா. இந்த மன்னர்களுக்கு எமீர்கள் (Emirs) என்று பெயர். அடிமைகளைப் பிடிப்பதில் சிற்றரசர்களுக்கிடையே நித்தம்போராட்டங்கள் நிகழும் மக்களுக்குப் பாதுகாப்புக்கிடையாது. இதைச் சாட்டாக வைத்து உதவி புரிய வந்தான் பிரிட்டிஷ்காரன் துப்பாக்கி முனையில் கிடைத்த இந்தப் பாதுகாப்பிற்கு நிபந்தனைகளிருந்தன. அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டது. இதற்குப் பிரதி உபகாரமாக பிரிட்டிஷ் மேலாதிக்கம் திணிக்கப்பட்டது. இதற்குப் பிரதி உபகாரமாக இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மதமும் உள்ளூர்ச் சட்ட திட்டங்களும் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது வட நைஜீரிய பிரிட்டிஷ் காவல் இராச்சியம் உருவாயிற்று! (1900) மேலும் 2 லட்சத்து 64 ஆயிரத்து 282 சதுர மைல் கொண்ட ஆபிரிக்க மண்ணில், பிரிட்டிஷார் இன்னுமொரு புது இராச்சியத்தை கட்டி எழுப்பி விட்டார்கள்!

இலாபகரமாகக் கடை நடத்தத் தெரிந்த, கைதேர்ந்த வியாபாரிகள் பிரிட்டிஷ்காரர். அரைச்சதம் காற்சதமாகச் சேர்த்து ஒரு தென் நைஜீரியாவைத் திரட்டினார்கள். ரூபா சதமாகத் திரட்டி ஒரு வட நைஜீரியாவைக் கட்டியெழுப்பினார்கள். இப்பொழுது பக்கத்தில் பக்கத்திலாகஒரே இடத்தில் இரண்டு கடைகள் எதற்கு? தென் நைஜீரியாவையும் வட நைஜீரியாவையும் சேர்த்து ஒரு நைஜீரியாவைச் சிருஷ்டித்து விட்டார்கள். அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த 3 லட்சத்து 73 ஆயிரத்து 250சதுரமைலும்ஒருத்தரை ஒருத்தர்முன்பின் தெரியாத 3 கோடியே 80 லட்சம் மக்களும் சுமார் 4000 மைல் தூரத்திலிருந்து வந்த, 46 வருட நீளமான பிரிட்டிஷ் ஆதிக்கம் என்ற துல்லிய சங்கிலியால் பிணைக்கப்பட்டு 1914-ம் ஆண்டு நைஜீரியா என்ற ஒரு இராச்சியம் உலகின் ஒரு மூலையில் முளைத்தெழுந்தது!

நைஜீரியா "இராச்சியம்" உருப்பெற்ற விதத்தைப் பார்த்தோம். இனி நைஜீரியா "தேசம்" இன்று எப்படியிருக்கிறது என்பதைக் கவனிக்கலாம்;

சஹாராப் பாலைவனத்தையடுத்த வட நைஜீரியாவில் வாழ்பவர்கள் அராபிய சந்ததியினர்; முஸ்லிம்கள். கிழக்கு நைஜீரியா மேற்கு நைஜீரியா என இராச்சிய ரீதியில் பிரிக்கப்பட்டிருக்கும் தென் நைஜீரியாவில் வாழ்பவர்கள் நீக்கிரோ சந்ததியினர். பிரதேச வாரியாகவும், இன வாரியாகவும் 'நைஜீரியா' என்ற இராச்சியத்தில் மக்களுக்கிடையே இருக்கும் மிகப் பெரிய வேற்றுமை இது.

வட நைஜீரியா இராச்சியத்தின் பெரும்பான்மை இனம் ஹௌஸா; கிழக்கு நைஜீரியாவிலுள்ள பிரதான இனம் இபோ. மேற்கு நைஜீரியாவில், யொருபா.

வட நைஜீரியாவில் பிற்காலத்தில் புலானி என்ற முஸ்லிம் படையெடுப்பாளர்களும் இங்கே வந்து குடியேறினார்கள். ஹௌஸா இன மக்களுடன் இவர்கள் கலப்பு மணஞ் செய்து ஹௌஸா—புலானி என்ற ஒரு இனத்தையே உண்டாக்கி விட்டார்கள். இலங்கையில் பறங்கிக்காரர் தோன்றிய பின்னணியைப் போன்றது இது. நாட்டின் பூர்வீக குடிபதிகள் தம் பலத்தைப் பறிகொடுக்கும் நிகழ்ச்சி. உலக சரித்திரத்தில், பல பக்கங்களிடையே நாம் இதைக் காண்கிறோம். இருந்தும், நாடோடிகளாகத் திரியும் ஹௌஸா இன மக்கள் கூட்டங்கள் இல, புலானி மக்களுடன் கலந்தொழியாது, தமது தனித்தன்மையை இன்றும் பேணி நீடித்து வாழ்கிறார்கள். போக்குவரத்துத் தொடர்புகள் அபூர்வமாயிருக்கும் தனிப் பிரதேசங்கள் இவர்களைக் காப்பாற்றி வைத்திருக்கின்றன. புலானி, ஹௌஸா இனங்களை விட,வட நைஜீரியாவில் வேறு பல மக்கள் கூட்டங்களுமுண்டு. அவற்றுள் பிரதானமானது கனூரி இனம்

### மேற்கு மாகாண வேறுபாடுகள்

மேற்கு நைஜீரியாவின் பெரும்பான்மையாயிருப்பது யொருபா இனம் ஒரு காலத்தில் யொருபா இராச்சியம் ஒன்று மேற்கே தாஹோமியையும் உள்ளடக்கி விரிந்திருக்கிறது. இம்மாகாணம் பிரிட்டிஷ் வருகைக்கு முன் யொருபா நாடு என்றே அமைக்கப்பட்டது. வட நைஜீரியாவிலுள்ள (முஸ்லிம்) ஹௌஸா—புலானி மக்களுக்கும் யொருபா நாட்டின் யொருபா மக்களுக்குமிடையே பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள், மதம், மொழி ஆகியவற்றில் பலரான வேற்றுமைகளுண்டு. யொருபா இனத்தை விட மேற்கு நைஜீரியாவில் எடோ, இபோ, ஊர்ஹோபோ ஆகிய

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8-ந்தேதி அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

## குடியரசு, ஜனநாயக கட்சிகள் மோதல்

## வெள்ளை மாளிகை வாசம் நிக்ஸனுக்கா? கென்னடிக்கா?

நாற்பத்திநாலாவது ஜனாதிபதி தேர்தல் அமெரிக்காவில் இம்மாதம் 8ம் தேதி நடைபெறுகிறது. 1789ம் ஆண்டு ஜோர்ஜ் வாஷிங்டன் முதலாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அன்று தொடக்கம் இன்று வரை நாலு வருடத்திற்கு ஒருமுறை அமெரிக்க தேர்தல் நிகழத் தவறவில்லை. உள்நாட்டுக் கலகங்கள், பொருளாதார நெருக்கடிகள், 1ம், 2ம் உலக யுத்தங்கள் எதுவும் இத்தேர்தல்களிற் குறுக்கிட முடியவில்லை.

### அரசுகள் ஐம்பது

அமெரிக்கா 50 மாகாண அரசுகளைக்கொண்ட ஓர் இணைப்பரசு. எனவேதான் ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் (United States of America) எனறழைக்கப்படுகிறது. இவற்றுள் அலஸ்கா, ஹாவாய் (தீவுகள்) ஆகிய இரு இராச்சியங்களும் 1956ம் ஆண்டுத் தேர்தலின் பின் ஐக்கிய அமெரிக்க இணைப்பரசில் சேர்க்கப்பட்டவை.

### இரு சபைப் பாராளுமன்றம்

மத்திய இணைப்பரசின் பாராளுமன்றத்திற்கு காங்கிரஸ் (Congress) என்று பெயர். காங்கிரஸ், பிரதிநிதிகள் சபை மேற்சபை (Senate) என்ற இரு சபைகளைக் கொண்டது. பிரதிநிதிகள் சபையில் 437 அங்கத்தவர்



திரு. கென்னடி

கள். இவர்கள் இரண்டு வருட காலத்திற்கே பதவி வகிப்பார்கள். மேற்சபை அங்கத்தவர்கள் தொகை 100. இவர்களின் பதவி காலம் ஆறு வருடம். ஜனாதிபதித் தெரிவுடன் வாக்காளர்கள் உப-ஜனாதிபதியையும் 437 பிரதிநிதி சபை உறுப்பினர்களையும் மூன்றிலொரு மேற்சபை அங்கத்தவர்களையும், மாகாணப் பாராளுமன்றங்களின் உறுப்பினர்களையும் 28 இராச்சியங்களின் தேசாதிபதிகளையும், மற்றும் பிரதேச அதிகாரிகளையும் தெரிந்தெடுப்பார்கள்.

### "தெரிவாளர்கள்" தெரிவு செய்கிறார்கள்

ஆனால் ஜனாதிபதியும் உப-ஜனாதிபதியும் தேர்தலில் நேர்முகமாகத் தெரியப்படுவதில்லை. ஒரு இராச்சியத்திலிருந்து அமெரிக்க காங்கிரஸில் எத்தனை பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்களோ அத்தனை "தெரிவாளர்"களை (Electors) ஒவ்வொரு இராச்சியமும் தெரிந்தெடுக்கும். தத்தம் இராச்சியத்தில் நவம்பர் 8ந் தேதித் தேர்தலில் முடிவு எவ்வாறிருக்கிறதோ அவ்வாறு அமைய இத் 'தெரிவாளர்கள்' ஜனாதிபதி உப-ஜனாதிபதி ஆகியோருக்கு வாக்களிப்பார்கள்.



திரு. நிக்ஸன்

### அபேட்சகர்கள் யார்?

8ந் தேதி நடக்கப்போகும் ஜனாதிபதி உப-ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்காவிலுள்ள இரண்டு பிரபல அரசியல் கட்சி அபேட்சகர்களும் வழமைபோல் போட்டியடுகிறார்கள். ஜனாதிபதிப் பதவிக்கு ஜனநாயகக் கட்சி அபேட்சகராக ஜோன் எப். கென்னடி (John F. Kennedy) போட்டியிடுகிறார். உப-ஜனாதிபதிப் பதவிக்கு மேற்சபை அங்கத்தவர் லிண்டன் பென்ஸ் ஜோன்சன் (Lyndon Bens Johnson) போட்டியிடுகிறார். ஜனாதிபதி பதவிக்கு குடியரசுக் கட்சி அபேட்சகராக றிச்சாட் எம். நிக்ஸன் (Richard M. Nixon) போட்டியிடுகிறார். உப-ஜனாதிபதிப் பதவிக்கு ஐ. நா. சபையில் நிரந்தர அமெரிக்கப் பிரதிநிதியாயிருந்த ஹென்றி கபொட் லொட்ஜ் (Henry Cabot Lodge) போட்டியிடுகிறார்.

எந்தக் கட்சி வெற்றிக் கொடி நாட்டப்போகிறது? ஆளும் கட்சியான குடியரசுக் கட்சியா? ஜனநாயகக் கட்சியா? யார் 'வெள்ளை மாளிகை'யில் வீற்றிருக்கப் போகிறார்—நிக்ஸனா? கென்னடியா? பெரும்பாலாரின் யூகம் கென்னடிதான், என்றாலும் கடைசிவரை திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

—"கும்மி"

## "யதார்த்தம்!-அப்படி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லுகிறது என்றும் குற்றம் சாட்டினார் திரு. பொன்னுத்துரை. மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு சிறு கதை எழுதத் தெரியாது என்றும் அது பற்றித்தாமே அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்ததாகவும் பெருமையோடு கூறிய திரு. பொன்னுத்துரை மட்டக்களப்பில் கையெழுத்துப் பத்திரிகைகள் மலிந்துள்ளதைக் கேலியாகவும், ஈழத்திலுள்ள சிலர் தமிழ் வளர்க்கப் பிரசாரம் செய்வதைக் கிண்டலாகவும் கூறிக் கூடியிருந்தவர்களைச் சிரிக்க வைத்தார். மட்டக்களப்பில் தம்மிடமிருந்து தமிழ் கற்றுக்கொண்டவர்கள் கூட யாழ்ப்பாணி... யாழ்ப்பாணி என்று குத்திக் காட்டுவதாகவும், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு என்று பாகுபாடு காட்டுவதாகவும், சொல்லி அதைக் கண்டித்தார் திரு. பொன்னுத்துரை.

### வெட்கம் இல்லை?

திரு. எஸ். டி. சிவநாயகம் பேசுகையில் மட்டக்களப்பான், யாழ்ப்பாணத்தான் என்ற பிளவை உண்டு பண்ணினால் தான் தமக்கு வாழ்வு உண்டு என்று கருதி அதே திருப்பணியில் ஈடுபட்டு வந்த திருவாளர்கள் நல்லையா, எதிர்மன்னசிங்கம் ஆகியோருக்கே வாக்குப் போடுங்கள் என்று தேர்தல் காலத்தில் மதுவருந்திவிட்டுத் தள்ளாடிய நிலையில் மேடையேறிக் கத்தித் திரிந்தவர்களுக்கு எல்லாம் இப்போது மட்டக்களப்பு—யாழ்ப்பாணம் என்று பிளவு இருப்பதாக வாய் திறந்து பேச வெட்கம் இல்லை? தூ......துப்புக் கெட்ட...... இவர்கள் தமிழ் வளர்க்க தமிழர் ஒற்றுமை வளர்க்க வேறு புறப்படுகிறார்களா?" என்று கேட்டார்.

### மட்டக்களப்பு விஷயம் கேலிக்கு உரியதல்ல

மட்டக்களப்பில் அச்சுயந்திர வசதி போதியளவு இல்லாததால் தமிழ் இலக்கிய ஆர்வமிக்கோர் அங்கு கையெழுத்துப் பத்திரிகைகள் நடத்துவது கேலிக்குரியதல்ல; அது அநுதாபத்தோடு நோக்க வேண்டிய தொன்று என்றும் அவர் சுட்டிக் காட்டினார். வரதர், நாவற் குழியூர் நடராஜன் ஆகியோரின் சிருஷ்டிகளைப் பாராட்டியும் இருவரின் சிறந்த பண்புகளை விளக்கியும் பேசிவிட்டுக் கடைசியில் மேற்கண்டவாறு கூறினார் திரு சிவநாயகம்.

### பகீரதன்

திரு பகீரதனின் பேச்சு தமிழகத்தைப்பற்றிக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் ஆணித்தரமாகப் பதில் அளிப்பதாக அமைந்து இருந்தது. [அவருடைய பேச்சு பிரத்தியேகமாகப் பிறிதோரிடத்தில் பிரசுரிக்கப்படுகிறது]

### பேச்சாளர்கள்

திருவாளர்கள் கே. லக்ஷ்மணன், கே. கைலாசபதி, சி. வைத்திலிங்கம், டொமினிக் ஜீவா, எப். எக். ஸி. நடராஜா, "யுவன்". கா. சிவத்தம்பி, இளங்கீரன், ஏ தர்மதாசா, அருள்தியாகராஜா, ஆகியோரும் பாராட்டுரைகள் வழங்கினார்கள். திரு விஜயபாஸ்கரனும் சிறிது நேரம் பேசினார்.

### நன்றி

நூலாசிரியர்கள் நாவற்குழியூர் நடராஜனும் வரதரும் தம்மையும் தமது நூல்களையும் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

கூட்ட ஆரம்பத்திலும் முடிவுக் கட்டத்திலும் முறையே வரவேற்புரையும், நன்றியுரையும் நிகழ்த்தினார், அழைப்பாளர்களில் ஒருவரான திரு சில்லையூர் செல்வராஜன். மற்ற அழைப்பாளரான திரு ஈழத்துச் சோமுவின் இறுதியான இரண்டாவது நன்றியுரையோடு சுமார் 5 மணி நேரம் நடைப்பெற்ற "எழுத்தாளர் சந்திப்பு" முடிவுற்றது. ......... கலந்திருந்தார்கள்.



அல்லைக் குடியேற்றப் பகுதியிலுள்ள இடதுகரை 3, இடதுகரை 4, கங்குவேலி, பொயவெளி, ஆகிய அரசினர் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் வருடாந்த உபசார விழாவின் போது எடுக்கப்பட்ட படம்.

## 'பத்திரிகை ஆசிரியர்கள்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரசுரித்துவிடும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. உதாரணமாக "சரஸ்வதி" போன்ற பத்திரிகைகள் குறிப்பிட்ட சில இலட்சியத்துக்காக நடத்தப்படுபவை. அந்தப் பத்திரிகைகள் பிரசுரிக்கும் விஷயங்களை எல்லாம் நிச்சயமாக "கல்கி"யும் "ஆனந்தவிகடனு"ம், "குமுத"மும் பிரசுரிக்க மாட்டா. இவற்றிற்கு இலட்சியத்தோடு வியாபார நோக்கும் உண்டு என்பதை நாம் மறந்து போகலாகாது.

### பத்திரிகை ஆசிரியர்கள்

"நிலைமை இப்படி இருக்க அவரிவரை குறை கூறிக் கொண்டிருப்பது முறையாகாது. பத்திரிகை ஆசிரியர்கள் என்றால் அவர்கள் கத்தி முனையில் இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அத்தனை சங்கடமானது அவர்களுடைய கடமை. பத்திரிகையில் ஒரு எழுத்து, வார்த்தை தவறினாலும் கூட அதனால் நாடு முழுவதற்குமே பெரு நஷ்டம் ஏற்படலாம். அத்தகைய பொறுப்பு வாய்ந்த பத்திரிகை ஆசிரியர்களை வீணில் குறை சொல்வது கூடாது." இவ்வாறு கூறினார் திரு பகீரதன்.

### தமிழ் சினிமா பார்க்கும் நேரம்

தமது பேச்சில் சிறுகதை எப்படி அமைய வேண்டும் என்பதையும் உதாரணத்தோடு விளக்கிய திரு பகீரதன் ஒரு நீண்ட தமிழ் சினிமா பார்க்கும் நேரம் வரை பொறுமையோடு இருந்ததால் தான் ஈழத்து எழுத்தாளர்கள் பற்றி ஓரளவு நேரில் தெரிந்து கொண்டதாகவும் அதுபற்றி மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார்.


ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பு?

சிறுகதை — எழுதியவர்: தங்கன்

"மணி பத்துப் பதி னென்ருகுது... இன்னுமென்ன கண்டறியாத எழுத்து? பேசாம வந்து படுத்துக்கோங்க அத்தான்..."

"கொஞ்சம் பொறு... இந்தா வந்திற்றன்"

"இப்படி எத்தின தரம் சொல்லிப்போட்டீங்க..."

"உனக்கு நித்திரை வந்தால் போய் படுத்துக்க... அப்புறமாக எழுப்பி விடுறன்...இதைக் கொஞ்சம் பிரதி பண்ணி வெச்சிரு... நாளையண்டைக்கு முடிவு தேதி..."

"ம்க்கும்... என்னால ஏலாது..."

"அ—மணி இங்க கொஞ்சம் வா...இதைக் கொஞ்சம் படிச்சுப்பாரு... சிறுகதைப் போட்டிக்கு அனுப்புற கதை. நீ நல்லா இருக்கு என்ருல்தானே பரிசு கிடைக்கும்..."

"இந்தத் தலையெழுத்தை எப்பிடி வாசிக்கிறதாம்...?"

"அட அம்மா படி. தலை எழுத்து வாசிக்கத் தெரியாத பெண்ணும் எங்கயாவது உண்டா? கணவன்மாரின் தலையெழுத்துக்களைத் தினம் தினம் படிக்கிருர்களே!"

"சும்மா போங்க..."

"............"

"ஐயையே அத்தான், இதென்ன எல்லாம் ஒரே கொச்சைப் பேச்சாக எழுதி வைச்சிருக்கீங்களே!"

"போ மணி, உனக்கு எதுவுமே தெரியாது. பேசுறதை அப்பிடியே எழுதுவது தான் உண்மையான இலக்கியம் தெரியுமா?"

"தெரியுது! உங்க இலக்கியத்தை யாரு படிக்கப் போருங்க...!"

"உன்ட மர மண்டையில மூளை இருந்தாறதானே... சங்ககாலத்திலே இலக்கியங்கள் யாவும் பாடலாகவே இருந்திச்சிது ... பின் பாரதி, நாவலர் போன்றவர்கள் அதிலே திருப்பத்தை ஏற்படுத்தி விட்டாங்க... பின் அதிலும் எத்தனையோ மறுமலர்ச்சி. இடபோதெல்லாம் பேசுறதை முடிந்த அளவு அப்பிடியே எழுதுறது தான் மறுமலர்ச்சியின சிகரமாகக் கணிக்கப்படுகிறது... அப்பதான் இலக்கியம் இயற்கையாக இருக்கும் எண்டு நான் நினைக்கிறன்..."

"போதுமே உங்க குட்டிப் பிரசங்கம்..."

"இந்தா ... மணி ... என் கண்ணில்ல ... நாளைக்கு அனுப்பவேணும்...இப்பவே இருந்து, பிரதி பண்ணி..."

"ம்க்கும்..."

"புருமுக்கல் முக்காமல்..."

"என் புருவில்ல..."

"பழிக்காமல் பழிக்கிறீங்க..."

"சொல்லுறபடி செய்.. இந்த நடேசன் குணம் தெரியுமா? அப்புறம் குட்டு வாங்குவா..."

"அதைத்தான் பாப்பம்... குட்டுறீங்களா இதழால மொட்டுறீங்களா எண்டு..."

"அது சரி...கோப்பி கிப்பி ஏதாவது கிடைக்குமா?

"கிப்பி கிடையாது. கோப்பி கிடைக்கும். ஆ... சீனி இல்ல..."

"நேரத்தோட சொல்றத்துக்கென்ன...?"

"சொன்னாலும், என்னிடத்தான் காசு கேப்பீங்களே...!"

"ஓகோ...நிதி மந்திரியும் நீதானே? பச்சத்தண்ணியாவது கொஞ்சம்..."

"தாராளமாக..."

●

"என்ன மணி மாதிரியா... இருக்காய்...?"

"ஒண்டுமில்ல..."

"என்ன ஒண்டுமில்லை... கண்ணெல்லாம் கலங்கியிருக்கு...முகத்தில் வாட்டம்... அழுதிருக்கிருய் போல இருக்குது..."

"ஒண்டும்..."

"பொய் சொல்லாத... எனக்கு எல்லாம் தெரியும் மணி..."

"அத்தான், பாத்தீங்களா இந்த அநியாயத்தை..."

"வீணுக ஏன் அழுகிருய்... வாறபோது வழியில சின்னத்தம்பியைக் கண்டன்... நீ நல்லா எழுதுவியே, நீ போட்டிக்கு எழுதல்லையா?' என்ருன். நான் எதுவும் பேச முடியாமல் மனசுக்குள்ள அழுது போட்டு வந்திற்றன்... என்னை விட உனக்குத்தான் துக்கம் அதிகமிருக்கும் ராவு ராவாகக் கண் முழிச்சி பிரதி பண்ணின நீ..."

"............"

"இனிமேல் நான் ஒண்டு செய்யப் போறன்..."

"............"

"எழுதுறதையே விடப் போறன் எழுதித்தான் என்ன பலன்... அதில செலவாகிற நேரத்தை வேற எதிலயாகுதல் செலுத்தின பிரயோசனமாக இருக்கும்... கொஞ்சம் லாம்பெண்ணை கொணடுவா. நான் எழுதி வெச்சிருக்கிற குப்பைகளையெல்லாம் பத்தவச்சி விடப் போறன்..."

"அத்தான்... உங்களுக்குப் பைத்தியமா? உங்களுக்கு வேணுட்டி எனக்குத் தாங்க ...அநியாயமாகப் பத்த வைக்காதீங்க..."

"இல்ல பத்தவைக்கத் தான் வேணும்...இனிமே இந்த எழுத்துச் சனியனே வேணும்..."

"அத்தான்! எனக்காக எழுதுங்க...உங்க முதல் ரசிகை என்ற பெருமையை எனக்குத் தாங்க..."

"முடியாது... எழுத்தை எரிக்கத்தான் வேணும்..."

"நீங்க நினைச்சாப் போல உலகத்திலே உள்ள எழுத்தெல்லாம் எரிஞ்சி போகுமா...?"

"எழுத்தையில்ல...எழுதினதை எரிக்கப்போறன்..."

"உங்க எழுத்தை நீங்களே எரிக்கிறதா?"

"வேறயாரு...?"

"என் கண் முன்னால எரிக்காதங்க"

"சரி...உன் மனசையும் ஏன் கஷ்டப்படுத்துவான்... பேசாமல் கடலைக்கார ஆச்சிக்குக் குடுத்துப் போடுறன் ...கடலையாவது கிடைக்கும்..."

●

ஊறங்கப் போகும் உற்சாகத்தில், அஜந்தா குகை ஓவியன் கூடத் தோற்றுப் போகும் வகையிலே, மட்டக்களப்பு வாவியில், ஆதவன் வர்ணசாலம் காட்ட ஆரம்பிக்கும் வேளை. பூங்கா ஒன்று இலாத குறையைப் போக்க, பொழுதுபோக்கிகள் வெள்ளைப்பாலத்துக் கம்பிகளிலே குந்திக் கொண்டு, வேண்டாத விடயங்களைப் பற்றி விதண்டா வாதம் புரிய எத்தனிக்கும் சமையம், வாவியிலே, அங்கொன்றும் இங்கொன்றுமாக விச்சுத் தோணிகள்— கரையிலே, காலத்துக்குக் காலம் திரண்டு அழுகும் சல்லு, சுரி, நகரசபை கொட்டிவிடும் குப்பை கூளங்கள் ஆகியன சேர்ந்து குடலைப் புரட்டும் ஒருவித துர்நாற்றம் உண்டாகி... மறுகரையிலே அந்தச் சோடாக்கடை, அதையடுத்து அந்த புதிய வாகைமரம்...வீடுகள்...அப்புறம் தென்னமரக் கூட்டங்கள், உயரே அந்தோனியார் கோவில் கொடிக் கம்பம், அத்தனையும் பொன்னைப் பொடியாக்கித் தீட்டிய ஓவியமாக...

தெரு விளக்குகள் அரைத் தூக்கம் தூங்க ஆரம்பிக்கின்றன...

வாவிக்கரை யோரமாகப் படுத்துக்கிடக்கிறது லொயிறஸ் வீதி, அகல ஒரமாகக் கம்பி வேலி. அதையடுத்து, அந்தத் தியேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே போடப்பட்ட ஆசனங்களாக இருக்க வேண்டும்— அதிற்சில. ஒன்றில் கடலையை ஒவ்வொன்ருகக் கொறித்தபடி அமர்ந்திருக்கிருன் நடேசன். வாவியிலே மிதந்து வந்த...நாற்றம் கலந்த குளிர் காற்று, கொதிக்கும் அவன் உள்ளத்துக்கும் உடலுக்கும் இதமாக விருந்தது போலும்...

யாரோ நாலைந்து பேர் வந்து பக்கத்து ஆசனத்தில் அமர்ந்தார்கள். எல்லோருடைய கைகளிலும் கடலைச் சுருட்கள். அன்றைய வாரப் பத்திரிகையில் வெளியாகியிருந்த முதற்பரிசு பெற்ற சிறு கதை பற்றியே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். "நற்குணம், இந்தக் கதையைப் படித்துப் பார்த்தாயா?..."

"அதப் பற்றி பேசாதே... ...இதுக்கெல்லாம் போய்..."

"அருநாதன், நம்ம நாட்டு இலக்கியமே படுமோசமாசப் போகுதப்பா...," காட்டெருமை போலக் கடலையை அசை போட்டுக் கொண்டு ஒருவன் சொன்னான்.

"பெரிய இலக்கிய மேதை சொல்ருர்...கேளுங்க..."

"போடா தியாகு, உனக்கென்ன தெரியும்? உன்னைப்

[15-ம் பக்கம் பார்க்க]




ரெமிங்டன் தமிழ்

டைப்ரைட்டரில் தமிழ்

வாசகம் முழுவதையும்

கையெழுத்துப் போலவே

வெகு வடிவாக டைப்

செய்யமுடியும்.

வேகமாக டைப் செய்வதற்கு வசதியாக தமிழ் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் டைப் செய்யத் தெரிந்தவர்க்கு ஆங்கிலத்திலிருந்து மாறி தமிழில் டைப் செய்வதும் சுலபம்.

தமிழில் டைப் செய்வது சுலபம்

ஸ்டாண்டர்டு (பெரியது)

போர்ட்டபிள் (சிறிது)

இரண்டு மாதிரிகளும் கிடைக்கும்.



Remington Rand

Post Box 788

294, Union Place,

COLOMBO 2.


# என் தம்பி..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக நலியப் பெயர்த்தும் செத்துப் பிறப்பதறகே ஆளாகி", ஆசை அருமல் இறத்தல்! அவர் விரும்பித் தேடும் சாவு—தன்னிழப்பு— ஏகமாய் நின்ற இறைவன் அருள் வெளிககுளே யான் எனபது அற ரூழ்கி "நாம் ஒழிந்து சிவமான" சாவு. தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தப் பேருண்மையாகப் பரம்பரை முறையில் போதிக்கப்பட்டு வரும் இந்த உண்மையைப் பிற நாட்டுப் பிறசமயத்து அறிஞரான ஆங்கிலக் கவிஞரும் உணர்ந்திருந்தார் எனபது அவர் கதையை நடத்திச் செல்லும் வித்தாலும் அகரி கலகாட் வாயில் வைத்து "என்னை இழந்தால் நால உய்வேன்" எனறு கூறியதாலும் தெளிவாகின்றது.

## வெளிவந்த நன்முத்து

சமயம் பலவாயினும் அடியவர்க்கு உண்மை உணர்த்தும் திருவருள் ஒன்றேயல்லவா" என்ற பொருள் படஅமைந்த கட்டுரை ஒன்று உதயமாகியது. ஆங்கில இந்து சாதன இதழில் வெளிவந்த அக் கட்டுரையை வாசித்த வன்னியசிங்கமும் நானும் "ஆழ் கடலின் அடியில் அமர்ந்து வெளிவராத அரு முத்துக்கள் பலவாய்" எனறும் "வெளிவந்த நன்முதல இந்தக் கட்டுரை" என்றும் பேசிக் கொண்டோம்.

முத்த மாமனரிடம் கட்டுரையின் ... தடித்தது. கூறிய போது அவர், "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பாலை புகில் அளவில்லை" என்பது திருஞான சம்பந்தர் திருவாக்கு. "அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் காலத்திலும் முன்னும் பின்னும் தமிழ் நாட்டிலும் வெளி நாட்டிலும் அருளில் தலைப்பட்ட அடியாரில் தம்மால் பெயர் குறிக்கப்படாத அத்தனை பேருக்கும் சேர்த்து வணக்கம் கூறியிருக்கிருரே" என்று கூறி அமைந்தார்.

## போப் பெயர்ப்பில் தப்பு!

வன்னியசிங்கத்துக்கு கலைமாணி (B. A) வகுப்புக்கு திருவாசகம்-போப் மொழி பெயர்ப்பும் மூலமும்-பாடமாக விதிக்கப்பட்டிருந்தது. அப்பொழுதும், தந்தையார், ஒரு முறை "உடையாள் உன்றன் நடுவிருக்கும்......... இருவீரும் இருப்பதானல்" என்ற திருப்பாடலின் பகுதிக்கு போப் தந்த மொழி பெயர்ப்பு அப்பகுதிக்கு அடிப்பட்ட சானரேர் கூறும் உரையைத் தழுவியதாக இல்லை என்று குறிப்பிட்டார். மற்ருெரு முறை "எட்டினோடு இரண்டும் அறியேனை" என்று அடிக்கும் மொழி பெயர்ப்பு வாய்ப்பாக அமையவில்லை என்று குறிப்பித்தார்.

மாமனர் "பறை அகரம்" பற்றிக் கூறியது நினைவுக்கு வரவே துருவிக் கேட்கத் துணிவின்றிக் குறிப்பாகக் கூறிய வளவில் கேட்டு அமைந்தோம்

இரு பெருங்கடல்களிலும் குளித்துத் திளைக்கவோ, ஆழத்தில் கிடந்த சங்கு பவளம் முத்துக்களை எடுக்கச் சுழியோடித் துழாவவோ துணிவு வந்ததில்லை. கரையில் நின்றபடியே திரையால் கொண்டு வந்து ஒதுக்கப்பட்ட சிறு சிப்பி சோகி ஊரிசங்குகளைப் பொறுக்குமளவுக்கே நமது நல்வினை அமைந்திருந்தது.

வன்னியசிங்கம் தமது மொழியினிடத்திற் போல தமது சமயத்தினிடமும் ஆழ்ந்த பற்று உடையவர். பிற சமயங்களையெல்லாம் சோபானமாக (உச்சியை அடைய உதவும் படிகளாக) கருதுவதால் எந்த மார்க்கத்தையும் இகழும் பான்மை சைவ சித்தாநதத்துக்கே இல்லாத ஒன்று. வன்னியசிங்கம் தாயார் மாமன்மார்களைச் சார்ந்து சைவக் கிரியைகளிலேயே நம்பிக்கையும் பற்றும் உடையவர். ஆனல் தகடபனரது விருப்பத்துக்குப் பணிந்து ஆண்டு தோறும் அவருக்குச் சிராத்தமே செய்துவந்தார். இந்துக் கல்லூரியில் பெற்ற சமயக் கல்வியின் பயனகவும் வீட்டில் மாமனர் தந்தையார் என்னும் இருவர்பாலும் பெற்ற கேள்வியன பயனகவும் சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் அவற்றின் உயர்வையும் நன்கு அறிந்திருந்தார். சாதனை எதிலும் அவர் தீவிரமாக முயன்றதில்லை என்று எண்ணுகிறேன். "மனத்துக் கலை மாசிலனுதல் அனைத்தறன்" என்று கருதி மனமாசை அகற்ற முயல்வதற்குத் தமக்கு இறைவன் காட்டிய வழி சமூக அரசியல் தொண்டே என்று அந்த வழியைத் தொடர்ந்தார்; கர்மயோகத்தில் இயன்றவரை முயன்று வாழ்ந்தார்.

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்கொழும்பில் மீன்பிடித் தொழில்

# "அவ்ளா.. அவ்ளா "என்ருல் கொழுவு.. கொழுவு என்று பொருள்படுகிறது

## ஆட்களுக்கு, தோணிகளுக்கு, கயிறுகளுக்கு உபகரணங்களுக்கு எல்லாம் தனிப்பெயர்கள்

## 'வண்ணுன்கல்ஞு' 'சுவீப் டிக்கட்'— இவற்றுள் உபகதைகள் அடக்கம்

தோணியில் மீன்பிடிக்கப் போகும் ஆட்களுக்கு மட்டுமல்ல தோணிகட்கும் நீர்கொழும்பு மீன்பிடி தொழிலாளர் பெயர் வைப்பதுண்டு. இப்பெயர்கள் கேட்பதற்கு மிக ருசிகரமானவையாகவும், பல சிறந்த உபகதைகளைக்கொண்டனவாகவும் இருக்கும். தோணி ஒன்று செய்ய குறைந்தது இரண்டாயிரம் ரூபாவரை தேவைப்படும். இது மீன்பிடி மக்களுக்கு ஒரு பெரிய தொகை. தோணியை அமைக்கப் பணம் கிடைத்த வரலாற்றை ஒட்டித் தோணிக்குப் பெயரிடுவர். அல்லது தோணிச் சொந்தக்காரரின் தன்மைக்கு இயைய. அவரிடம் காணப்படும் விசேஷ குணமொன்றுக்கு இயைய தோணிக்கும் பெயரிடுவர்.

### சிந்தாத்திரி மாதா

தோணியின் வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு, தோணி கடலேரிக்குக் கொண்டுவரப்படும். முதன் முதலாக அததோணியில் கடலுக்குப் போய் மீன் பிடிகக முன்பு, நீர்கொழும்பில் தூவை என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு கத்தோலிக்க தேவாலயத்திற்கு அத்தோணியில் சென்று தான தருமங்கள் செய்வது நீர்கொழும்பு மீன்பிடி மக்களின் பண்டுதொட்டு இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு பழக்கமாகும். சிந்தாத்திரி மாதா தேவாலயம் என்று அக்கோவிலை அழைப்பர். கடலில் மீன்பிடிக்கப் போகும்போது சிந்தாத்திரி மாதாவை மன்ருடிக்கொண்டு கடலுக்குச் செல்வர். கடலில் ஏதும் ஆபத்துக்கள் உண்டானுல் சிந்தாத்திரி மாதாவைப் பார்த்து மன்ருடிக்கொள்வார்கள. கடலில முதன்முதலாக இறக்கப்பட்ட தோணியைச் சிந்தாத்திரி மாதாவுக்கு ஒப்புக்கொடுக்க கடல்பவனி புறப்படும்பொழுது தோணிக்கு நாமகரணம் சூட்டப்படும். அப்பெயர் என்றும் மீன்பிடி மக்களிடையே நிலைத்துவிடும்.

### காரணப் பெயர்கள்

ஒருமுறை சிலை வெளுக்கும் வண்ணுன் ஒருவன் ஒரு மீன்பிடி தொழிலாளியின் துணிகளை வெளுத்து எடுத்துக் கொண்டு வந்தான். அவன் கொண்டு வந்த சீலைப் பொட்டணத்திற்குள் எப்படியோ ஒரு தொகைப் பணம் இருந்தது. இப்பணத்தைப் பெற்ற தொழிலாளி சில காலங்கட்குப் பின்பு ஒரு தோணி அமைத்தார். இத்தோணிக்கு 'வண்ணுன் கல்ஞு' என்று பெயரிட்டார்கள். இன்னும் ஒரு தொழிலாளி சுவீப் டிக்கட்மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு ஒரு தோணி அமைத்தார். அதற்கு 'சுவீப் டிக்கட்' என்று பெயரிட்டார்கள் இப்படியாக தோப்புக்கொத்து, பம்பரையன், கஞ்சக்குழி என்னும் தோணிப் பெயர்கள் ஒவ்வொரு உபகதைகளைக் கொண்டதாக இருக்கும்.

### கயிறுகளுக்கும் பெயர்

தோணியில் காணப்படும் ஒவ்வொரு கயிறுக்கும் பெயருண்டு. கூறைப் பாயைத் தோணியுடன் பொருத்தியுள்ள கயிறுகளை வாவரை, அத்தாம், கம்பாபி, பாவலை என்றும் பெயர்களிட்டு அழைப்பர். காற்று மும்முரமாக வீசும்போது அக்கயிறுகளின் பெயரைச் சொல்லி அவற்றை இறுக்கவோ கூறைப் பாயை மடிக்கவோ சுமற்றை அவிழ்த்துவிடவோ அவர்களால் இலகுவாக முடிகின்றது.

### அவ்ளா...அவ்ளா

மீன்பிடிக்க உபயோகிக்கப்படும் உபகரணங்கட்கும், தூண்டிற் கயிறுகட்கும்கூட பெயர்களுண்டு. கெட்டக்கலை, கீழ்மாத்தை, மேல் கயிறு, மடிக்கயிறு, குட்டிக் கயிறு என்பன அவற்றுள் சிலவாகும். இக்கயிறுகளில் உள்ள தூண்டிலில் ஒரு மீன் சிக்கிக்கொண்டால் கயிற்றின் பெயரைச் சொல்லிச் சப்தமிடுவர். நாம் ஏதாவது ஒரு விஷப் பிராணியைக் கண்டால் அதன் பெயரைச் சொல்லி அழைப்பதில்லை. அதுபோல மீன்பிடி தொழிலாளரும் தூண்டில் இரையை மீன் விழுங்கினுல் "மீன்! மீன்!!" என்று சப்தமிடமாட்டார்கள் மீன் சிக்கியவுடன் அக்கயிற்றைக் கையில் வைத்திருப்பவர் கெட்டக்கலை—அவ்ளா என்று சப்தமிடுவார். உடனே மற்றவர்கள் கெட்டக்கலைக் கயிறு உள்ளவருக்கு உதவி செய்ய விரைவார்கள். "அவ்ளா" என்னும் சொல் கொழுவு என்னும் பொருளுடையது. மீனைப் பிடித்துத் தோணிக்குள் போடும்வரை "அவ்ளா, அவ்ளா" என்று மிகச் சந்தோஷ ஆரவாரஞ் செய்வர். தோணிக்கு மிகச் சமீபமாக மீன் வந்தவுடன் கொழுவு தூண்டிலைப் போட்டுக் கொழுவி, மீனின் தலையில் தடியால் அடித்து அதைத் தூக்கித் தோணிக்குள் போட்டுக்கொள்வர்.

என். டி பீரிஸ்


### பலமுறைகளிலும் தொழில்

நீர்கொழும்பு,— முன்னக்கரை, பெரியதெரு முதலாம் இடங்களில் வசிக்கும் மீன்பிடி தொழிலாளர் தோணிகளிலும் இயந்திரப் படகுகளிலும் கடலுக்குச் சென்று தூண்டில் கயிறுகள் போட்டு மீன் பிடிக்கிருர்கள். ஆனுல் நீர்கொழும்பு கடற்கரைத்தெரு, குடாப்பாடு, ஏத்துக்கால போன்ற பாகங்களில் வசிக்கும் மீன்பிடி தொழிலாளர் தெப்பங்களில் கடலுக்குப் போய் பலரக வலைகளைப் போட்டு மீன் பிடிக்கின்ருர்கள். இப்படியாக இலங்கையில் மீன்பிடிக்கப் பிரயோகப்படும் எல்லா முறைகளும் நீர்கொழும்பு மீன்பிடி தொழிலாளரால் கையாளப்படுவதினுலேயே இவர்கள் மிகச் சிறந்த மீன்பிடிகாரர்களாகக் கருதப்படுகின்ருர்கள்.

### ஆறுவித வலைகள்

தெப்பம் என்பது கட்டுமரம். அல்மெயிசியா என்னும் பாரமற்ற, வைரமற்ற இலகுவான மரவொருவகையால் தெப்பங்கள் பெரும்பாலும் செய்யப்படுகின்றன. சில தெப்பங்கள் பதினெரு முழம் வரை பெரிதாகவும் வேறு சில ஆறு தொடங்கி ஒன்பது முழம் வரை நீளமுடையதாகவும் செய்யப்படும். சாதாரணமாக ஒரு தெப்பம் செய்ய ரூபா 500/- வரை செலவாகும். குறைந்தது ஐந்து வருடங்கள் வரை ஒரு தெப்பத்தை மீன்பிடிப்பதற்காக உபயோகிக்கலாம். தெப்பம் மட்டும் இருந்தால் மீன்பிடிக்க முடியாது. வலைகளும் தேவைப்படுகின்றன கடலிலே காலத்துக்குக் காலம் வெவ்வேறுவகையான வெவ்வேறு அளவான மீன்கள் அகப்படுவதுண்டு எனவே வலை போட்டு மீன் பிடிக்கும் தெப்பக்காரர் காலத்துக்கும் மீன்களின் தன்மைக்கும் இயையப் பல்வேறு வலைகளைக் கடலில் போட்டு மீன்பிடிப்பார்கள். நீர்கொழும்பு தெப்பக்காரர் பிரதான ஆறு வகை வலைகளைப் பாவித்து மீன்பிடிக்கிருர்கள். சுருவலை, குதுப்புவலை, கும்புளாவலை, சாலை வலை, பொடிச்சாலை வலை, நண்டு வலை, திருக்கைவலை என்பன அவைகளுள் பிரதான வலைகளாகும்.

—(தொடரும்)



நீர்கொழும்பு கடற்கரைக் காட்சிகள்

உபயம்: இலங்கை வானொலி

# இராச்சியத் துணுக்குகளிடையே வேற்றுமைத்தூண்கள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மை இனங்களுமுண்டு.

### கிழக்கிலே......

கிழக்கு நைஜீரியாவின் பிரதம இனம் இபோ. இவர்களிடையே சமுதாய உணர்ச்சி இம்மியும் கிடையாது. குடும்பம், உற்ருர் உறவினர்கள் — இவ்வளவும் தான் இவர்களின் சமுதாயம். 20-ம் நூற்ருண்டிலே, அதிசயங்களிலொன்று! இபோ-இனத்தைவிட, கிழக்கு நைஜீரியாவிலிருக்கும் பல இனங்களில் உதாரணத்துக்கு ஒரு சில! இபிபியோ, ஐஜோ, அன்ஞங், திக்கார்......!

### மொழிகளும் மதங்களும்

நைஜீரியாவின் மூன்று இராச்சியங்களிலுமுள்ள இனங்களின் பெயர்கள் மொழியை அடிப்படையாகக் கொண்டவை. எத்தனை இனங்களுண்டோ அத்தனை மொழிகளுண்டு. தென் நைஜீரியாவில் ஆங்கிலம் பெரிதும் பரவலாயிருக்கிறது. வட நைஜீரியாவில் பரவலாயிருப்பது ஹௌஸா மொழி. மேற்கு நைஜீரியாவில் யொருபா மொழியும் எடோ மொழியும் பேசப்படுகின்றன. கிழக்கு நைஜீரியாவில் இபோ, இபிபோ, ஐஜோ ஆகியமொழிகள் பேசப்படுகின்றன. பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளனைத்திலும் பொதுவான ஒரு அம்சம்: இத்தனை மொழி பேசுபவர்களையும் இணைத்து வைத்திருக்கிறது வந்தேறு குடியாகிய ஆங்கிலம். ஆட்சி மொழியாயும் வர்த்தக மொழியாயும் மேலோங்கி நிற்கிறது இம் மொழி.

மதவாரியிலும் ஒற்றுமை மூன்றிலொன்றுதான்! பூர்விக ரகத்தைச் சேர்ந்த ஒருவித மத அனுஷ்டானம் உள்நாட்டுச் சரக்கு. புறத்தேயிருந்து வந்த படையெடுப்பாளரால் திணிக்கப்பட்டவை இஸ்லாமும் கிறிஸ்துமதமும். மதங்கள் மூன்று!

### உருப்பெற்றதா? உருவாக்கப்பட்டதா?

மதங்களால், மொழிகளால், இனங்களால், பழக்கவழக்கங்களால் சிந்துண்டு சிதறுண்டு கிடந்த ஒரு காட்டுப் பிரதேசத்தைக் கடல் கடந்து சூறையாட வந்த வெள்ளைக்காரன் அதிகாரம் என்ற சாக்கில் நிரப்பி, 46 வருடங்களாக நைஜீரியா என்ற ஒரு நெல்லிக்காய் மூடையை கட்டி வைத்தான். நைஜீரியா என்ற பதமே ஒரு பிரிட்டிஷ்காரன் சிருஷ்டி. ரோயல் நைகர் கம்பனி பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடந்த ஒரு விவாதத்தில் முதன் முதலாக நைஜீரியா என்ற பெயர் 1899-ல் தான் —61 வருடங்களுக்குட்பட்டுத் தான்!— பிரயோகமாயிற்று! இந்த நாடும் இராச்சியமும் உருப் பெற்ற-இல்லை [illegible] நைஜீரியாவுக்கும் பல வழிகளில் ஒற்றுமையுண்டு.

### இலங்கையும் நைஜீரியாவும்

வர்த்தக வளர்ச்சிக்காக இப் பிரதேசங்களுக்கு வந்த ரோயல் நைகர் கம்பனியே இறுதியில் நைஜீரிய இராச்சியத்தைக் கட்டி எழுப்பிற்று. இலங்கையிலும் இவ்வாறு 17-ம் 18-ம் நூற்ருண்டுகளில் டச்சுக் கிழக்கு இந்திய கம்பனி, பிரிட்டிஷ் கிழக்கு இந்திய கம்பனி ஆகியவை இதே கைங்கரியத்தைப் புரிந்திருப்பது சரித்திர மாணவர்கள் அறிந்த விஷயம். இன்னும், இலங்கையும் கடலோரப் பிரதேசப், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் ஆகிய துண்டுகளாகவே அடிமைப் படுத்தபபட்டு பின்னுல் ஒட்டுப்போடப்பட்டு லெங்கை இராச்சியமாயின!

இவவாறு ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல் வசதிகளுக்காக நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன; இராச்சியங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன; பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டன. நாடு, தேசம், இராச்சியம் (State) இராச்சிய—தேசம் (Nation—State) இப்பதங்களுக்கு அர்த்தமென்ன? சரித்திரத்தில் ஏற்பட்ட தற்செயலான சம்பவத்தினுல் ஒரு இராச்சிய—தேசம் (Nation—State) தோன்ற முடியுமா? அது நிலைக்க முடியுமா? அவ்விராச்சிய தேசத்திலுள்ள குடிமக்கள் அனைவரும் அந்நாட்டு அரசாங்கத்திற்குப் பக்திபூர்வமாக வணக்கஞ் செலுத்த முடியுமா? மனம் நிரம்பி வாழ இயலுமா? [ஒரு தனிக் கட்டுரைக் குரிய விஷயம் இது]

### நைஜீரியாவில் பிரதேச சபைகள்!

1914-ல் நைஜீரியா பிரிட்டிஷ் ஆதிக்கத்திற் குட்பட்டு ஒரே அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. காலனி நாடாயிருந்த இக்காலத்தில் நாட்டின் நிர்வாகம் நைஜீரியா கௌன்ஸில் என்ற ஒரு சபையின் ஆலோசனையுடன் நிகழ்ந்தது. 1922-ல் லாகோஸ் குடியேற்ற நாட்டிற்கும் தென் நைஜீரிய மாகாணங்களுக்கும் பொதுவாக சட்ட நிரூபண சபை (Legislative Council) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனுல் வட நைஜீரியா தேசாதிபதியின் நேரடி நிர்வாகத்திலேயே தொடர்ந்தது. சுமார் 1942 வரை நிலைமை இப்படியிருந்தது.

பரவிவரும் முன்னேற்றம் காரணமாக அரசமைப்பில் மாற்றங்கள் தேவைப்பட்டன. "நைஜீரியாவிலுள்ள வேற்றுமைகளுக்கூடாக ஒற்றுமையைக் காணும் ஓர் அரசமைப்பு"த் தேவை என உணரப்பட்டது. இதன் விளைவாக 1946-ல் மாகாணவாரியாகப் பிரதேச சபைகள் (Regional Councils) மூன்று மாகாணங்களிலும்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விளைவுகளைக் கண்டு . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக் கொண்டார். அத்துடன் தான் ஒரு இந்து அல்ல என்பதையும் எடுத்துக் காட்டித் திரிந்தார்.

## கண்ணும்பூச்சிக்காரர்கள்

அத்துடன் இப்பிரமுகரை கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரித்தது. சாதி பேதங்களுக்கெதிராகவும், எமது மக்கள் அனைவரினதும் சுதந்திரத்திற்காகவும் எங்கள் கட்சி போராடிக்கொண்டிருக்கும் போது, என்னுடன் போட்டியிட்ட தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் வைதீக இந்து மதத்திற்காக வாதாடினர். தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் இவருக்கு ஆதரவளித்தது. தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திருவாளர் பொன்னம்பலத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி பலவாறாக இகழ்ந்தது; இவர் ஒரு பிற்போக்குவாதி என்று பட்டம் சூட்டிற்று. கம்யூனிஸ்ட் கட்சி கண்ணும் பூச்சி விளையாடுகிறது இங்கு ஒன்றைச் சொல்லுகிறது; அங்கு ஒன்றைக் கூறுகிறது. தேர்தல் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள தமிழ்க் காங்கிரஸ் ஊழியர்களானார்கள். செங்கொடிகளை அகற்றிக் காங்கிரஸ் கொடிகளை ஏற்றினார்கள். தேர்தல் தினத்தில் கம்யூனிஸ்டுகளில் சிலர் வாக்களிப்பு நிலையங்களில் காங்கிரஸ் பிரதிநிதிகளாக (Polling Agents)ப் பணியாற்றினார்கள்.

## சந்தர்ப்பவாதிகளுக்கு இலாபமுண்டு

இவர்கள் சிலரின் பெயரையும் என்னால் குறிப்பிட முடியும். இவர்களுள் முக்கியமானவர் "சலுகை குறைந்த மக்கள்" என்று வர்ணிக்கப்படும் சமூகத்தைச் சேர்ந்த எம். வி. சுப்பிரமணியம் என்பவர். இவர் ஒரு கம்யூனிஸ்ட். இருந்தும் ஐ. தே. கட்சி அதிகாரத்திலிருந்த பொழுது அடிக்கடி கொழும்புக்கு வந்து வந்து போவார். தமிழரசுக்காரரை விழ்த்துவதில் "நான் உங்களுக்கு ஆதரவளிப்பேன்" என்று இங்கு கூறி அரசாங்கத்திடம் சில நன்மைகளைப் பெறுவது இவர் வழக்கம். யாழ்ப்பாணத்திற்குத் திரும்பியதும் இவர் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவனாகவும் கம்யூனிஸ்டுகளின் தலைவனாகவும் வேஷம் போடுவார். தாழ்த்தப்பட்ட சோதரர்களையும் ஏனையவர்களையும் பிரித்து வைப்பதில் திருவாளர் சுப்பிரமணியத்திற்கும் அவரைப்போன்ற சந்தர்ப்பவாதிகளுக்கும் இலாபமுண்டு. இம்மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் தமிழரசுக்காரர்களுக்குத் தடைபோடும் கைங்கரியத்தில் இரு பகுதியினருக்கும் பங்குண்டு. அவர்களுள் ஒருத்தர் இங்கு அதிகாரத்திலிருக்கும் சிங்கள ஏகாதிபத்திபவாதிகள்; அடுத்தவர் கம்யூனிஸ்டுகள். அரசாங்கத்தரப்பு முன் வாங்குகளிலிருப்பவர்களும் கம்யூனிஸ்டுகளுமாகிய இவ்விரு சாராரும் இப்படி தமிழ் பேசும் மக்களைப் பிரித்து வைத்து அரசாளலாம் என்று கருதுகிறார்கள். இம்முயற்சி பயனுள்ளதா இவர்களுக்கு என்று நான் வருத்தப்படுகிறேன்.

எம்மத்தியிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்படுவதை கம்யூனிஸ்ட் கட்சி விரும்பவில்லை. உரிமை குறைந்தவர்கள் எம் மத்தியிலிருந்தால்தான் அவர்களைச் சுரண்டித் தமது செல்வாக்கை நிலை நாட்டலாம் என்று இவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி சம உரிமைகளுக்காகப் போராடுகிறது நல்லூர்த் தொகுதியில், தேர்தல் சுவாலைக்குள் நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சைவபரிபாலன சபைப் பாடசாலை ஒன்றில் அயலிலுள்ள 'தாழ்த்தப்பட்ட' குழந்தைகளை அனுமதிக்கமறுத்தார்கள். அப்பாடசாலைக்கு நான் நேரில் போய்தாழ்த்தப்பட்டகுழந்தைகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரினேன். இதற்கு அவர்கள் இணங்காவிட்டால் நான் அவ்விடத்தில் சத்தியாக்கிரகம் செய்வேன் என்றேன்—அல்லது பாடசாலை எவருக்குமே மூடப்படச் செய்வேன் என்று கூறினேன். அப்பகுதியில் 'தாழ்த்தப்பட்ட' மக்கள் வாக்குள் ஆக 150 மாத்திரம்தான். ஆனால் வைதீக இந்துக்களாக 1000-க்கு மேற்பட்ட வாக்காளர்கள் அங்கிருந்தார்கள். (இருந்தும் எங்கள் கொள்கையிலிருந்து நான் மசிந்து விடவில்லை.)

நியாயத்தின் பக்கத்தில் நிற்பதற்கு நாம் பயப்படவில்லை. எனவேதான் கூறுகிறேன்: அநியாயத்திற்கெதிராக நீதியை நிலைநாட்டும் பணியில் இறுதி வெற்றி கிடைக்கும்வரை போராடுவது எங்களால்— எங்கள் கட்சியால் — சாதிக்கக் கூடிய ஒன்றேதான்!



[illegible] கிராமிய நடனத்துக்கு முதலிடம் பெற்றவரான செல்வி க. மங்கையர்க்கரசியின் குறத்தி நடனம்.

படம்: "[illegible]"

## புதை பொருள் கூறும் உண்மை

விஜயன் இலங்கைக்கு வருமுன்னரே வடக்கே வன்னிப் பிரதேசத்தில் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்திருக்கிறார்கள் என்று ஊகிக்கச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கிளிநொச்சியிலிருந்து மேற்கே ஆறு மைல் தூரத்திலுள்ள உருத்திரபுரம் குடியேற்றத்திட்டத்தில் பலதரப்பட்ட விக்கிரகங்களும் ஆயுதங்களும் கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி இறையதிகாரி ரி. முருகேசுப் பிள்ளை இப்புதை பொருட்களைக் கண்டெடுத்தார். யாழ்ப்பாண நூதனசாலை அதிபர் இப்பொருட்களைப் போய் பார்வையிட்டிருக்கிறார் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் கற்கால நாகரிகத்தைச் சேர்ந்தவைகளென வர்ணிக்கப்படுகின்றன

## மீண்டும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவுக்குப் புகார் செய்தார். மந்திரி இப்போது உத்தரவு போட்டு விட்டார். சிங்களச் சிக்கல் தீர்ந்து விட்டபின்னர்தான் அந்தத் தமிழ் ஊழியர் தமது சம்பளத்தைப் பெற்றார்.

மத்திய தந்திக் கந்தோரில் 'மொழித் திருத்தானம்' செய்த ஒரு பெண் ஊழியர் மாட்டிக்கொண்டார். 'புக்' பண்ணப்பட்ட தந்திகள் எல்லாவற்றையும் அதாவது ஆங்கிலத்திலும் தமிழிலும் 'புக்' பண்ணப்பட்டவற்றையும் கூடச் சிங்களத்தில் பதிந்து வைத்தார். இது விஷயம் மேலதிகாரிகளுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதும் அந்த அம்மணி அகப்பட்டுக் கொண்டார். தந்தி எந்த மொழியில் 'புக்' பண்ணப்படுகிறதோ அதே மொழியில்தான் பதியப்பட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு உள்ளது.

## சிங்களர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

604 எம் எஸ். சிவரொத்தினம், கொழும்பு-6; 605 க. சிலசப்பு, மீசாலை; 606 சி. எஸ். அந்தோனிப்பிள்ளை, கொச்சிக்கடை.

607 சா. சச்சிதானந்தன் இணுவில்; 608 க. நல்லையா, காத்தான்குடி; 609 எஸ். செயநாயகம், கல்கிசை; 610 க ஞானசம்பந்தன், பண்டத்தரிப்பு; 611 சி. பூரணானந்தன், கொழும்பு-5; 612 ம. மகேந்திரன், கொழும்பு-2; 613 மு சுவாமிநாதன், மூகத்துவாரம்; 614 சு. கருணையானந்தன், இணுவில்.

## திருமலை தி. மு. க. கிளை

திருமலை தி. மு. க. கிளை தீபாவளியன்று தீபாவளி எதிர்ப்பு தினக் கூட்டம் நடத்தியது. அவ்வமயம் திரு சா. நந்தகோபாலன் கருத்தரங்கத்திற்கு சமூகமளித்து தலைமைவகித்தார். கழகத்தைச் சார்ந்த திரு. என். கே. சாமி பேசுகையில் "தமிழினம் அரசியல் சுதந்திரம்மட்டும் பெற்றுவிட்டால் போதாது. அறிவுச் சுதந்திரம் பெற முயற்சிக்க வேண்டும்" எனக் கூறினார். திரு என். மாணிக்கராசாவும் பேசினார்.


"அமுதக் கலையே அள்ளி வீசும்
குமுத மலரும் நீயே!!...."

என்று போற்றும்படி நீங்கள் அழகு பெற அணிய வேண்டியது

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்

ஒன்றே!!

இது,
கண் கவர் அழகிய பல நிறங்களிலும்; நல்ல நவீன டிசைன் களிலும்; குறைந்த விலையிலும் எங்கும் கிடைக்கும்.

சாரியின் விலை ரூ. 19-80

ஒவ்வொரு ஞாயிறு மாலை
நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை
இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில்
குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

★ ★ ★

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி.

கொழும்பு.

மொத்த வியாபாரப் பகுதி: [illegible]

—Mylads 662/60—




### சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183, கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராச்சியத் துணுக்குகளிடையே . . .

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தப்பட்டன. இதற்கு அடித்தளமாக பிரதேச, கலாச்சார, இனவாரி, வேற்றுமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இச்சபைகளோ நைஜீரிய கௌன்ஸிலோ இன்னும் மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்தவையாக வளர்ந்து விடவில்லை என்பது விசேட கவனத்திற்குரியது. இலங்கையில் சட்ட சபை (State Council) இயங்கிய காலத்தில் இலங்கைக்கிருந்த சுதந்திரங் கூட இந்நிலையில் நைஜீரியாவிலிருக்கவில்லை. கலனி ஆட்சியின் கீழ் தேசாதிபதி அதிகாரம் செலுத்தும் நிலையிலேயே இத்தகைய வேறுபாடுகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. என் செய்வோம்! எமது இலங்கையில் தமிழ் பேசும் தலைவர்கள் செய்த தவறு.

## இணைப்பரசின் பரிணாமம்

திமர் வேகத்தில் 5 வருடங்களுள் நைஜீரிய அரசமைப்பு வளர்ச்சியில் மேலும் ஒருபடி முன்னேற்றம் 1951-ல் நிகழ்ந்தது சட்ட நிருபண சபைக்குப் பதிலாக பிரதிநிதிகள் சபை (House of Representatives) அந்தரார்ப்பணமாயிற்று. பிரதிநிதிகளுள் பெரும்பான்மையோர் மறைமுகத் தேர்தலால் தெரிவு செய்யப்பட்டார்கள். இலங்கைப் பிரதிநிதிகள் சபையிலிருப்பதுபோல, துரைத்தனத்தாரின் உரிமைகளைக் கவனிக்க நியமன அங்கத்தவர்களும் இச் சபையில் இடம் பெற்றுர்கள்.

இந்த ஏற்பாடுகள் ஆளப்படும் மக்களிடையே இருந்த வேற்றுமைகளுக்கு போதிய அளவில் பரிகாரமாய் அமையவில்லை என்ற அபிப்பிராயம் வலுத்தது பிரதேச சபைகள் ஏற்படுத்தினலும் அதிகாரம் மத்திய கேந்திர ஆட்சியில் குவிந்திருப்பதால் அரசாங்க இயந்திரம் மக்கள் அபிலாஷைகளுக்கிணங்க இயங்க முடியாது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் (நைஜீரியாவில்!) ஏற்றுக்கொண்டது பிரதேச சுயாட்சியை வலுப்படுத்தியும் மாகாண விவகாரங்களில் மத்திய அரசு தலையிடும் அதிகாரத்தை மேலும் துண்டித்தும் அரசமைப்புச் சட்டம் மேலும் திருத்தப்பட்டது. ஒக்டோபர் 1, 1954ல் நைஜீரிய இணைப்பரசு உதயமாயிற்று சுதந்திரம் நிறைந்த இன்னும் ஆறு வருடங்கள் இருந்தன.

### மாகாண அரசுகளுக்குச் சம்பூர்ண சுதந்திரம் இந்திய இணைப்பரசு

போல் மத்திய அரசில் அதிகாரம் குவிந்திருந்தது, பிரஸ்தாப அரசியல் திட்டத்தின்படி. ஆனால் 1957ல் பிரதேச அரசுகளின் அமைப்பு விஸ்தரிக்கப்பட்டு மாகாண சுயாட்சி ஸ்திரமாக்கப்பட்டது வட மாகாணத்திற்குச் சுயாட்சி கிடைத்தது இரு வருடங்களுக்குப் பின்னர், 1959ல், நைஜீரியாவில் மாகாண அரசுகளுக்கும் மத்திய அரசிற்குமிடையே உள்ள அதிகாரப் பிரிவினை முடிவாயானது. குறிப்பிட்ட ஒருசில விஷயங்களில் மாத்திரமே மத்திய அரசு சட்டமியாறலாம். ஏனைய துறைகள் அனைத்திலும் சட்டமியற்றும் அதிகாரம் மாகாண அரசுகளுக்கு மாத்திரமே உண்டு! மத்திய அரசு இந்த அதிகாரத்தில் எவ்விதமும் தலையிட முடியாது.

இங்கே மத்திய அரசின் பாராளுமன்றத்தில் 312 பிரதிநிதிகள். வட மாகாண மக்கள் காங்கிரஸ் (N. P. C.) இன்றைய பாராளுமன்றத்தில் 142 ஸ்தானங்களைக் கைப்பற்றி அரசாங்கம் அமைத்திருக்கிறது பிரதமர் வட மாகாண மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த அபூபக்கர் பலேவா. கிழக்கு மாகாணத்தில் செல்வாக்குகொண்ட நைஜீரிய தேசிய கவுன்சில் (N. C. N. C.) உம் இதன் அனுதாபிகளும் பெற்ற ஸ்தானங்கள் 89. மேற்கு மாகாண நடவடிக்கைகுழுவும் அனுதாபிகளும் பெற்ற ஸ்தானங்கள் 73.

ஃ

### நிலைக்குமா? தழைக்குமா?

நைஜீரிய இணைப்பரசு நிலைக்குமா? அரசியல் அவதானிகள் இன்று கேட்கும் கேள்வி இது.

நாட்டிலுள்ள வேற்றுமைகளையும் அவற்றின் காத்திரத்தையும் கவனித்தோம். நைஜீரியா ஒரு நெல்லிக்காய் மூடை என்பதையும் அதைக் கட்டி வைத்திருந்தது பிரிட்டிஷ் அதிகாரம் என்பதையும் கண்டோம். இந்த மேலாதிக்கம் இன்று அகன்றுவிட்டது பொதுப் பிணைப்பான ஆங்கிலமும் மறைந்துவிடலாம் அடுத்து என்ன நிகழும்? தென்கிழக்காசிய நாடுகளில் ஐரோப்பிய அதிகாரமும் ஆளவந்தோரின் மொழியும் ஆகிய பிணைப்புகள் குலைந்ததும், நாடுகளில் குழப்பமும் கலவரமும் நிறைந்ததைக் கண்டிருக்கிரேம். இந்தியா, மலேயா, பர்மா, இந்தோனேஷியா, இந்தோ-சீன ஆகிய நாடுகளில் ஒன்றுவது விதிவிலக்காயிருக்கவில்லை. ஏனைய நாடுகளில் உடனே ஆரம்பித்த கலவரங்கள் இலங்கையில் பத்து வருடங்களுக்கு பின்தான் தோன்றின. வேற்றுமை இவ்வளவுதான். இவற்றுக்கு அடிப்படைக் காரணம் என்ன? இந்நாடுகளில் "இராச்சியங்கள்" ஏற்படுத்துவதில் அடித்தளமாயிருந்தது ஏகாதிபத்திய வல்லரசுகளின் சுரண்டல் வசதிகளே. துப்பாக்கி முனையில் ஏற்பட்ட இந்தப் பிணைப்பும் "ஒற்றுமையும்" சரித்திரத்தின் போக்கில் சிலசமயம் நீடிக்க முடியலாம். ஆனால் நிரந்தரமான, நிச்சயமான பிணைப்பு ஏற்பட வேண்டுமானல் மக்கள் கூட்டங்கள் அனைத்தும் உரிமையனைத்தையும் பெற்று மனம் நிரம்ப வேண்டும். இலங்கையில் நிகழவில்லை; நைஜீரியாவில் இது நடக்குமா? 150 வருட பிரிட்டிஷ் ஆட்சி ஈரின இலங்கையில் சாதிக்கத் தவறியதை, 46 வருட பிரிட்டிஷ் ஆட்சி ஈரேழு இனம் வாழும் நைஜீரியாவில் சாதிக்குமா? இங்கு கிடைக்காத தேசாபிமானம் நைஜீரியாத் தலைவர்களிடையே வளருமா?

### புண்பட்ட இதயங்களின் புனித நம்பிக்கை

காலம்தான் பதிலளிக்க முடியும்!

நைஜீரியாவிலுள்ள மூன்று பிரதான கட்சிகளும் தத்தம் மாகாணங்களில் மாத்திரமே பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றி நாடனைத்திலும் பெரும்பான்மைக் கட்சிகளாய் விளங்குகின்றன இலங்கையிலும் நிலைமை இதுவன்றே! ஆனல்......உ ஸ்......வி...... நைஜீரியாவில், வடமாகாணத்தில்தான் பெரும்பான்மை மக்களினம் உண்டு! பெரும்பான்மைக் கட்சியுமுண்டு!!

எது நடந்தாலும், எமது நாட்டில் சிறுபான்மையினரான எமக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய அனுபவங்கள் எதுவும், இன்னெருதருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே எமது விருப்பம். மக்கள் அனைவரும் தத்தம் உரிமைகளைப் பெற்று, உள்ளத்தில் உவகை பொங்கி ஒற்றுமையாய், ஒருகுலமாய் சாந்தியுடன் வாழ, நைஜீரியாவில் நல்லது நடக்கும் என்பதே எமது புனித நம்பிக்கை.



குதூகலமான 2-வது வாரம்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை) றீகல் (அம்பாறை) குயின்ஸ் (காலி)

இம்பீரியல் (இரத்தினபுரி) தாஜ்மஹால் (மாத்தளை) ரோயல் (பண்டாரவளை) கணேசன் (திருகோணமலை)

ஜெமினி கணேசன்—சரோஜாதேவி—எம். என் ராஜம்—எம். என். நம்பியார்—டி. கே. பகவதி தங்கவேலு—நாகேந்திரராவ் முதலியோர் நடித்த

எல்லாரும் இந்நாட்டு மன்னர்



வெற்றி முரசு கொட்டும் 4-வது வாரம்!

எல்பின்ஸ்டன் (கொழும்பு) றெக்ஸி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன் — சௌகார் ஜானகி—ரங்கராவ் — கண்ணாம்பா அசோகன்—துரைராஜ்—முத்துலட்சுமி—சுந்தரிபாய் நடித்த

[மற்றும் 5 திரைகளில்] படிக்காத மேதை


# ருஷ்யமேதை...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

இலக்கிய உலகில் டால்ஸ்டாய் அடைந்திருக்கும் சாசுவத மனித இனப் பண்பாட்டு வரலாற்றிலேயே மகோன்னத நிலையில் ஒன்றாகும் என்று லெனின் புகழ்ந்து பாராட்டினுர்.

புத்துயிர், காஜி முராத், கேலிக்கைக்குப் பின்னர் முதலிய நாவல்களையும் இருளின் ஆட்சி, மெய்யறிவின் பலன்கள் என்ற நாடகங்களையும் பல சிறுகதைகளையும் பின்னர் டால்ஸ்டாய் எழுதினுர்.

ருஷ்ய ஞானி டால்ஸ்டாயின் நினைவை சோவியத் மக்கள் பூஜிக்கின்றனர். சோவியத் நாட்டில் அவருடைய நூல்கள் இலட்சக்கணக்கான பிரதிகளில் வெளியிடப்படுகின்றன. மனித குலம் முழுவதுமே அவருடைய நூல்களில் மிக ஈடுபாடு கொண்டிருக்கிறது.

—என் நடராஜா, தீர் கொழும்பு.





வெற்றிகரமான 2—வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)

லிபேர்ட்டி (பதுளை)

ஒரு ஏழை உழவனின் வாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களை எடுத்துக் காட்டும் இலட்சிய திரை விருந்து!

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாங்கான பைந்தமிழ் திரைக் காவியம். உள்ளத்தை உருக்கும் கதை. ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய திரைக் களஞ்சியம்.

ஜெமினி கணேஷன், பத்மினி, ராகினி, பாலையா, சந்திரபாபு, எஸ். வி. சுப்பையா டி. பாலசுப்பிரமணியம், சுகுமாரி, அங்கமுத்து முதலியோர் நடித்த

பொன்னு விளையும் பூமி

திரைக் கதை—வசனம்: இராம அரங்கண்ணல் சங்கீதம்: கே. எச். ரெட்டி

பின்னணி பாடியவர்கள்:
சிதம்பரம் ஜெயராமன் — டி. எம். சௌந்திரராஜன் சீர்காழி கோவிந்தராஜன் — சுசிலா — ஜிக்கி ஜமுனாராணி — ஜானகி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உலக சுவாத்தியங்கள் (2)

சென்ற அத்தியாயத்திலே நாம் ஈர—உஷ்ண சுவாத்தியத்தைதப்பற்றி ஆராய்ந்தோம். நமது இரண்டாவது அத்தியாயத்திலே நாம் வெப்ப வலயப்புல்வெளிச் சுவாத்தியத்தைப் பற்றி ஆராய்வோம்.

வெப்ப வலயப் புல்வெளிகளை 'சவானுஸ்' என்றும் அழைப்பதுண்டு. இப்புல்வெளிகள் ஈர—உஷ்ணப் பிரதேசங்களுக்கு வடக்கேயும் தெற்கேயும் காணப்படுகின்றன. அதாவது இப்புல்வெளிகள் மகர ரேகைக்கும் கற்கடக ரேகைக்கும் உள்ளடங்கி இருக்கின்றன. வடக்கில் இப்புல்வெளிகள் பாலைவனங்களாக மாறுகின்றன. தெற்கில் மழை மிகுதியின் காரணத்தால் மிக ஈர, மிக உஷ்ண வலயங்களாக மாறுகின்றன. ஆகையினலே 'சவானுஸ்' பிரதேசம் அடர்ந்த காட்டுக்கும் பாலைவனத்திற்கும் மத்தியில் இருக்கிறதென்பதை நாம் அறிய முடிகிறது. இதன் காரணமாக வடக்குப் பக்கத்திலே இருக்கும் புல்வெளிகள் பாலைவனத்துக்குச் சொந்தமாகவும் மழை மிகக் குறைவாகக் கிடைக்கும் பகுதியாகவும் இருக்கின்றன.

தெற்குப் பக்கத்திலுள்ள இடங்கள், வடக்குப் பிரதேசங்களைவிட அதிக மழையைப் பெறுவதினல் அவை ஈர உஷ்ண பிரதேசத்திற்கு சொந்தமானதாகவும் காணப்படுகின்றன. இந்தச் "சவானுஸ்' பிரதேசங்களில் வருடம் முழுவதும் உஷ்ணம் மிகுதியாகவும், மழை மிகக் குறைவாகவும் இருக்கின்றது. இங்கே பெய்யும் மழை கோடை காலத்தில் மட்டுமே பெய்யும்.

உஷ்ணம்: இப்பிரதேசங்களிலே ஈர—உஷ்ண வலயங்களைப்போல வருடம் முழுவதும் உஷ்ணம் மிகுதியாகவே இருக்கும். கடற்கரையோரப் பகுதிகளிலே சற்றுக் குறைவாகவும், உள்நாட்டுப் பிரதேசங்களிலே சற்றுக் கூடுதலாகவும் இருக்கும்.

வரை மழை பெய்யும். இம்மழை அநேகமாகக் கோடை காலத்திலேயே பெய்யும். ஈர உஷ்ண பிரதேசங்களை அண்டியிருக்கும் 'சவானுஸ்' பிரதேசங்களில் மழை 40 அங். வரையிருக்கும். ஆனல் பாலைவனத்தை அண்டியுள்ள 'சவானுஸ்' பிரதேசங்களில் மழை சற்றுக் குறைவாக இருக்கும்.

அங்குள்ள அதி வெப்பத்தை ஆடுகள் தாங்கமாட்டா. வெனிசூலாவிலும் கயனு மேட்டு நிலங்களிலும் உள்ள லானேஸ், பிறசிலில் உள்ள கம்போஸ், ஆபிரிக்காவில் உள்ள சூடான் பிரதேசம், கொங்கோ காடுகளுக்கு கிழக்கிலும், தெற்கிலும் உள்ள

| மழை | தை | மாசி | பங் | சித் | வை | ஆனி | ஆடி | ஆவ | புர | ஐப் | கார | மார் | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | |
| றையோடி ஜனேரோ | 5 | 4.3 | 5.3 | 4.4 | 3.5 | 2 | 1.6 | 1 8 | 2.6 | 3.2 | 4.3 | 5.4 | 3 6 |
| டிம்பக்டு: | 0 | 0 | .1 | 0 | .3 | .9 | 3.5 | 2.8 | 1.1 | .4 | 0 | 0 | .75 |

டிம்பக்டு சகாராப் பாலைவனத்தை அண்டியிருப்பதனல் மழை மிகவும் குறைவாக இருப்பதை நாம்காண்கிறேம். கார்த்திகை முதல் சித்திரைவரை மழை துப்பறவாகப் பெய்வதில்லை. கோடைகால மாதங்களான வைகாசி தொடக்கம் புரட்டாசிவரைதான் சிறிய அளவில் பெய்கின்றது. ஆனல் றையோடிஜனேரோவில் இப்படியல்ல. இப்பகுதி

"சிறீமலர்"

கரையோரத்தை அண்டியிருப்பதனலே 40 அங்குலம் வரை மழை உண்டு. ஆனல் டிம்பக்டுவைப்போல மழையில்லாத வரட்சியான காலம் இல்லை. கோடை காலமாகிய கார்த்திகை முதல் மாசி மாதம் வரை மற்றும் மாதங்களை விடக் கூடுதலாக மழை பெய்யும். (றையோடி ஜனேரோ தென் கோளார்த்தத்தில் இருப்பதனலே கோடை காலம் கார்த்திகை தொடங்கி பங்குனிவரையும் உண்டு)

தாவரங்கள்: கோடை காலத்தில் மட்டும் மழையைப் பெறும் வெப்ப வலயங்களில் மழையில்லாத காலமே நீண்டது. இவ்வரண்ட காலம் முழுவதும் தண்ணீரில்லாது உயிர் தாங்கி நிற்கவல்ல மரம் எதுவும் கிடையாது. அங்கு மழை காலம் நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு மேல் நீடிப்பதில்லை. எனவே

நிலங்கள், அவுஸ்திரேலியாவின வட பாகம் ஆகியவைதான் மிக முக்கிய வெப்ப வலைய புல் நிலங்கள்.

பயிர் செய்கை: இப் புல்வெளிகளிலே மனிதர்கள் முக்கியமாக மந்தையையே வளர்த்து வருகின்றனர். சில இடங்களிலே சூடான், நைஜீரியா ஆகிய இடங்களில் சோளம், தினை, பருத்தி, நிலக்கடலை, எண்ணெய் விதை முதலியன பயிரிடப்பட்டு வருகின்றன. கம்போஸிலும், லானேஸிலும் மந்தை வளர்ப்பதே மனிதரின் முக்கிய தொழில். சிற்சில பகுதிகளிலே கரும்பு, பருத்தி, சோளம் முதலியன பயிரிடப்பட்டு வருகின்றன. வட அவுஸ்திரேலியாவில் புல்வெளிகள் இயற்கையாக இருப்பதைப்போலவே இருக்கின்றன. பயிர்கள் எதுவும் பயிரிடப்படவில்லை.

மிருக வாழ்க்கை: இப்புல்வெளிகளிலே மிருக சஞ்சாரம் அதிகமாக இருக்கின்றது. புல்லைப் புசிக்கின்ற மிருகங்களும், மாமிசத்தை உண்ணும் மிருகங்களும் இங்கு வசிக்கின்றன. முக்கியமாக ஒட்டகச் சிவிங்கி, மான், மரை, ஆடு முதலிய புல் தின்னும் மிருகங்களும், சிங்கம், கரடி, புலி முதலிய கொடிய மிருகங்களும் வசிக்கின்றன. இம்மிருகங்கள் புல் புசிக்கும் மிருகங்களையே இரையாகக் கொள்வதினல், புல் புசிக்கும் மிருகங்கள் வேகமாக ஓடக்கூடிய இயக்கம் உடையன. இக்காட்டு மனிதர்கள்

| உஷ்ணம் | தை | மாசி | பங் | சித் | வை | ஆனி | ஆடி | ஆவ | புர | ஐப் | கார் | மார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை | பாகை |
| றையோடி ஜனேரோ | 77 | 78 | 77 | 74 | 71 | 68 | 67 | 69 | 69 | 71 | 73 | 75 |
| டிம்பக்டு | 71 | 74 | 88 | 92 | 94 | 94 | 89 | 86 | 89 | 89 | 81 | 71 |

றையோடிஜனேரோகடற்கரையோரத்தில் இருப்பதினலே வருடம் முழுவதும் 77-75 பாகைக்குமிடையிலேதான் உஷ்ணம் இருக்கின்றது. ஆனல் டிம்பக்டு ஆபிரிக்காக் கண்டத்தின் உட்பாகத்தில் பாலைவனத்தை அண்டியிருப்பதினல் உஷ்ணம் மிகவும் கூடுதலாக இருப்பதைக் காண்கிறேம். வைகாசி, ஆனி மாதங்களிலே உஷ்ணம் 94 பாகைக்குப் போகின்றது. தை, மாசி மாதங்களிலே உஷ்ணம் 71 பாகையிலேயே நிற்கிறது. ஆகையினல் காலத்துக்குக் காலம் உள்ள உஷ்ண வித்தியாசம் 12-15 பாகைவரைதான் இருக்கும். ஈர—உஷ்ண வலயங்களிலே இவ்விதம் இருப்பதில்லை.

மழை: இந்தச் 'சவானு' பிரதேசங்களில் ஒரு வருடத்திற்கு 20 அங்குலம் தொடங்கி 40 அங்குலம்

அங்கு வளருவது சொற்ப காலத் தாவரமாகிய புல் வகையே. இவை மிக விரைவாகத் தோன்றி மிகக் குறுகிய கால எல்லைக்குள் பூப்பூத்து, வித்துமிட்டு மழை காலம் முடிய தாமும் மடிந்துவிடுகின்றன.

மழையில்லாத காலம் முழுதும் நிலைக்க வல்ல ஒரு சில மரங்கள் அங்குமிங்கும் காணப்படுகின்றன. மழை அதிகரிக்கும் இடங்களில் மரங்களின் தொகையும் அதிகரிக்கின்றது. நீரூற்றுகள், ஆற்றோரங்கள்போன்ற நீர் கிடைக்கக்கூடிய இடங்களிலும் மரங்களைக் காணலாம். இம்மாதிரி இடையிடையே மரங்களோடு கூடிய புல் நிலத்திற்கு சவானு என்று பெயர். இத்தகைய நிலங்களில் மாடுகளை வளர்ப்பது முக்கிய தொழிலாகும்.

மந்தைகளை வளர்க்கும் இடையர்களாக விளங்குகின்றனர்.

## வளர்மதி புதிய மருமக்கள்

3189 செல்வி அ. கோ. நாகேஸ்வரி, செம்பியன் பற்று.

3190 ந. திருக்குமரன், பெரியமணல்.

3191 தம்பிப்பிள்ளை குணவீரசிங்கம், சாவகச்சேரி

3192 எம். வசந்தி, மருதானை.

3193 ச. மரியதாஸ், கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

3194 பி. ரி. செ. நல்லையா மருதானை.

# ருஷ்ய மேதை லியோ டால்ஸ்டாய்

[உலகப் புகழ் பெற்ற ஞானி லியோ டால்ஸ்டாயின் அமர தினம் இந் நவம்பர் மாதமே. ஆதலால் அவரைப் பற்றிய சிறு கட்டுரையை இங்கு வெளியிடுகிறேம்.]

மாஸ்கோவிற்குத் தெற்கிலுள்ள யாஸ்னயா போல்யானுவில் 1828-ல் பிரபு வம்சத்தில் பிறந்தார் ருஷ்ய மேதை லியோ டால்ஸ்டாய்.

ருஷ்யாவிலிருந்த மிகப் பழைய பல்கலைக் கழகத்தில் 1844-ல் டால்ஸ்டாய் சேர்ந்து கீழ்த்திசை மொழிகளைக் கற்க முற்பட்டார். ஆனல் தத்துவ விசாரணையிலேயே இவருடைய எண்ணமெல்லாம் மூழ்கியிருந்ததால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. யாஸ்னயா போல்யானுவிற்குத் திரும்பி வந்து வேலை செய்து கொண்டே சுயமாகப் படிக்கத் தொடங்கினர்.

பண்ணை அடிமை முறையும், நிலப்பிரபுக்களின் எதேச்சாதிகாரமும், ஜார் அரசன் முதலாம் நிக்கொலசின் ஆட்சியால் தலைவிரித்தாடிய கொடிய அடக்குமுறையும் இளைஞர் டால்ஸ்டாயின் உள்ளத்தில், ஆருத்

முதல்தரமான எழுத்தாளர் என்ற பெயரையும் புகழையும் டால்ஸ்டாய்க்குப் பெற்றுத் தந்தது இந்த நூல். ருஷ்ய இலக்கியத்திற்குப் புத்துயிரூட்டி உய்விக்க வந்தவர் என்று கருதப்பட்டார் டால்ஸ்டாய்.

முக்கிய சரித்திர நிகழ்ச்சிகளினல் ஆகர்ஷிக்கப் பட்ட டால்ஸ்டாய் மீண்டும் இலக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடலானர். ஆறு ஆண்டுகள் (1864—1869) பாடுபட்டு "போரும் அமைதியும்" என்ற புகழ் பெற்ற நாவல் எழுதினர். 1812-ல் ருஷியாவின் மீது படையெடுத்த நெப்போலியனை எதிர்த்து நடைபெற்ற பெரும் போரைப் பகைப் புலனக்கொண்டு பின்னிப் புனையப் பட்ட இப்பெருங்காவியம் ஈடு இணையற்றுத் திகழ்கிறது.

1870-ல் லியோ டால்ஸ்டாய் "அன்ன கரினு"வை எழுதினர். இந்தக்காலத்தில் தான் அறிஞர் டால்ஸ்டாயின் கண்ணேட்டத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டதெனலாம். அன்றைய ருஷ்ய சமுதாயத்தில் மேலோங்கியிருந்த முறைகேடுகளையும் அநீதிகளையும் அவருடைய மனச்சாட்சியால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை எளிய மக்களுடன் விவசாயிகளுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

கோடிக்கணக்கான உழைப்பாளி மக்கள் மீது,

துயரையும் வேதனையையும் உண்டாக்கின அப்போது காகசில் போர் நடந்து கொண்டிருந்தது. இராணுவத்தில் சேர்ந்தார் டால்ஸ்டாய் இச்சமயத்தில்தான் பாலியம் என்ற நாவலுடன் அவருடைய இலக்கியப்பணி தொடங்கியது.

அதே சமயம் அங்கு நடந்த கிரிமியப் போரில் ருஷ்ய மக்களின் மேன்மைச் சிறப்புகளை, தமதருமைத் தாயகத்திற்காக அரும் பெரும் வீர சாகசங்களாற்றிய எளிய ருஷ்ய மக்களின் பேராண்மையை கிரிமியப் போர் ஒளிபிட்டுக் காட்டியது. செவாஸ்தபோல் கடற்படைத் தளத்தைப் பாதுகாக்கப் போராடிய ருஷ்ய வீரர்களின் மாவீரம் கண்டு டால்ஸ்டாய் பரவசமுற்ருர். "செவாஸ்தபோல் கதைகள்" என்ற நூல் வெளியாயிற்று.

விரல் விட்டு எண்ணத்தகுந்த ஒருசிலர் பேயாட்சி நடத்துவதையும், அரசாங்க இயந்திரமும் மதமும் இதற்குப் பின் புலமாய் நிற்பதையும் நேரில் கண்ட டால்ஸ்டாய் நெஞ்சு பொறுமினர். இதை எதிர்த்து கண்டன முழக்கம் செய்தார். பிரபுக்கள் உறவினின்றும் தம்மைத் துண்டித்துக்கொண்டார். அன்றிருந்த சமூக அமைப்பின் ஒழுக்க இழிவையும், நயவஞ்சகத்தையும் அம்பலப்படுத்தினர். மனிதனை மனிதன் அடக்கி நசுக்குவதற்கு உரிமை இல்லையென்று அறை கூவினர். அயலானை நேசி; தீமையை சாத்வீகமாக எதிர்த்து நில் என்ற உண்மைக் கிறிஸ்தவக் கோட்பாடுகள்தான் டால்ஸ்டாயின் தத்துவ சாஸ்திரமாயிற்று.

(13-ம் பக்கம் பார்க்க)

## இயற்கையின் மாட்சி!

பச்சைபசும் போர்வைநிலம் காணும்—அங்கே
பால்மணக்கும் நெற்கதிர்க ளாடும்!
இச்சைமிகு வானபிறையும் தோணும்—மங்கை
இன்பமுகம் அதற்குவமை யாகும்!

அலர்ந்தமலர் நிறைந்தமணம் வீசும்—வண்டு
அமர்ந்திருந்து தேன்குடித்துப் பறக்கும்!
சலசலென புனலொலியும் கேட்கும்—வண்ண
சன்னகயல் துள்ளபுனல் சிறக்கும்!

கட்டவிழ்த்த கன்றினங்கள் துள்ளும்—காலைக்
கதிரவனின் ஆட்சியெங்கும் தங்கும்!
மொட்டவிழ்த்த செங்கமலம் சிரிக்கும்—அவை
முகமலர்ந்து செங்கதிரை வணங்கும்!

தண்கலையில் நின்றுலவும் மீன்கள்—அங்கே
தன்னிகராய் ஓடிவிளை யாடும்!
வெண்மலரும் அல்வலையில் ஆட—நம்
மென்மனதில் இன்பநிலைக் கூடும்!

பசுமையிலே படிந்தபனி நீங்கும்—வானில்
பறவையினம் சிறகடித்து ஓடும்!
விசும்புநில மூறைந்தவிருள் மாயும்—எங்கும்
விடிந்ததனல் இயற்கைமாட்சி கூடும்!

— தஞ்சை முத்துதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் கூட்டம்

"இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், சைனு போன்ற தேசங்களில் குடும்பத் தலைவனின் சம்பளத்தைக் கொண்டே அவன் குடும்பம் நடக்கக் கூடியவாறு சம்பளம் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதே போல் இலங்கையிலும் குடும்பத் தலைவனின் வருவாயைக் கொண்டே குடும்பத்தை நடத்த வேண்டும். அதற்காகவே தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை ரூ. 4-75 க்கு உயர்த்தவேண்டுமென்று போராடி வருகிறோம்."

இவ்வாறு கேகாலையைச் சேர்ந்த பெரம்புத் தோட்டத்தில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் திரு கே.ஜி. எஸ். நாயர் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

கேகாலையைச் சேர்ந்த பெரம்புத் தோட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவில் அணிமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது மத்திய கமிட்டிலிருந்து இ. தொ. காங்கிரஸ் தலைவர்களான திருவாளர்கள் ஏ. அஸீஸ், எஸ் சோமசுந்தரம் கே. ஜி. எஸ். நாயர், டி. எம். பீர்முகம்மது, தொழிலாளர் கவி கோவிந்தசாமி தேவர், ஜில்லா உறுப்பினர் திரு பியதாஸா பீரிஸ் ஆகியோரும் சமுகமளித்திருந்தார்கள்.

திரு. எஸ். சோமசுந்தரம் பேசும்போது கூறியதாவது:

இலங்கையில்தொழிலாளர் சரித்திரத்தில் இன்று ஒரு புது யுகம் ஆரம்பமாகிக் கொண்டு வருகின்றது. சென்ற காலங்களில் தொழிலாளர் கேட்பாரற்ற நிலையிலிருந்தார்கள். ஆனல் இன்றோ கட்டுப்பாட்டுணர்ச்சியும், சங்க ஆர்வமும் கொண்டவர்களாக மாறியுள்ளார்கள். நமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு நம்முன் இருக்கிறதை எண்ணிப் பார்த்து செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

திரு அஸீஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "தோட்டத் தொழிலாளா விஷயத்தில் தோட்ட முதலாளிகளோ அல்லது சென்றகால அரசாங்கங்களோ கவனம் செலுத்தவில்லை. காலஞ்சென்ற திரு பண்டாரநாயகா ஆட்சி காலத்தில் சேமலாபநிதி, தொழில் கோட்டுகள் இவைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். இதனுலே சுதந்திரக் கட்சி அதிகாரத்திற்கு வர முடிந்தது என்று கூறினர்."

பின்பு திரு டீ. எம். பீர்முகம்மது பேசும்போது, குடிப்பழக்கத்தால் வாலிபர்கள் கெட்டுவிடக்கூடாதென்றும், எந்த நாட்டிலும் அங்குள்ள வாலிபர்கள் தியாகத்தினுலே நாடு முன்னேறியுள்ளதென்றும், ஆகையால் ஓய்வு நேரங்களில் பத்திரிகை படித்தல், கல்வளர்த்தல், தேகப்பியாசஞ் செய்தல், கைப்பந்து, கால்பந்து போன்ற விளையாட்டுக்களில் அதிக கவ செலுத்தி மற்றுப் பிரஜைகளுக்கு நிகரான தோட்டத தொழிலாளர் குழந்தைகளும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் திரு. பியதாஸ பீரிசும் பேசினுர்.

பின்பு தோட்டக் கமிட்டிக்கு திரு சந்தனத்தைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்னை மரியாள் தேவாலயத்தில் தொழிலாளர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

# கழகச் செய்திகள்

## நுவரெலியா மாவட்ட இ. தி. மு. க. கிளை

இ. தி. மு. கழக நுவரெலியா மாவட்ட தேர்தல் கூட்டம் கடந்த 25-9-60ல் நுவரெலியா ஹொலிடிரிண்டி கல்லூரியில் நடைபெற்றது. தேர்தலில் திரு செ. இராமநாதன் நுவரெலியா மாவட்டசெயலாளராகவும் திரு. எஸ். இராமலிங்கம் துணைச் செயலாளராகவும் திரு. ஏ. எஸ். மாணிக்கம் பொருளாளராகவும்மற்றும் 11 பேர் அடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிற்பகல் 2-30 மணிக்கு கார்கில்ஸ் மைதானத்தில் திரு குறட்செல்வன் குமாரசாமி தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள்: இசை நவராசன், இரா. திருமறவன், ஏ செல்வராசன், ஏ. எஸ் மணியம் ஆகியோர் பேசிய பின் இ. தி மு கழக பொதுச் செயலாளர் திரு. ஏ இளஞ்செழியன் பேசியபோது 1961-ம் ஆண்டுக்குப் பின்னர் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்த ஆட்சியாளர் முடிவு செய்திருப்பதால் ஒவ்வொரு திராவிட மகனும் அரசாங்க அலுவலகங்களில் கொள்ளும் தொடர்புகளை தமிழிலேயே வைத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

## காரைநகர் மணிவாசகர் சபை

காரைநகர் மணிவாசகர் சபையின் வருடாந்தக் கூட்டம் கடந்த 9-10-60-ல் காரைநகர் இந்துக் கல்லூரி நடராச மண்டபத்தில் சபைத் தலைவர் ஆ. கனக சபை தலைமையில் கடவுள் வழிபாட்டுடன் ஆரம்பமானது.

காரியதரிசியால் முந்திய வருடாந்தக் கூட்ட வரலாறும் நிருவாக சபையாரின் அறிக்கையும் வாசிக்கப்பட்டு சபையோரால் அங்கிகரிக்கப்பட்டன. தனுதிகாரியால் வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின் புது வருட உத்தியோகஸ்தர் தெரிவு பின் வருமாறு நடைபெற்றது.

தலைவர்: திரு. ஆ. விநாயகம் பிள்ளை ஆசிரியர், உப தலைவர்கள்: திரு ந. சபாரத்தினம், திரு இ. கந்தையா, இணைக்காரியதரிசிகள்: பண்டிதர் சு. அருளம்பலம், தனுதிகாரி:- வித்துவான். க. முருகேசன்.

பின்னர் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் "திருவாசகம்" என்னும் பொருள் பற்றி சபையோர் மகிழும் வண்ணம் சொற்பொழிவாற்றினுர்.

## செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

கிரிலப்பனை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் சார்பில் அணிமையில் மன்றத் தலைவர் திரு. அன்ரனி பெர்னுன்டோ தலைமையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது.

"கன்னித் தமிழ் மணம் பாரெங்கும் கமழ வேண்டும் என்பது பாரதியாரின் பேரவா. முதலில் தமிழரிடையே தமிழ் மணம் கமழ வேண்டும் அப்பொழுதே அது பாரெங்கும் பரவும். பாரதியின் ஆவலும் பூர்த்தியாகும்" என்று தலைவர் தமதுரையில் குறிப்பிட்டார்.

திரு. மா கதிர்வேல் சொற்பொழிவாற்றுகையில், "பாரதியார் ஒரு கவிஞராக மட்டுமன்றி சிறந்த தேச பக்தராகவும் விளங்கினுர் என்று கூறினுர்.

மற்றும் திருவாளர்கள் அன்ரனி இராசையா, மா. கு. சாமி ஆகியோரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

## சைவ வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்

கொழும்புத்துறை சைவ வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம்21-10-60ல் மேற்படி பாடசாலை மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வித்தியாசாலையின் மிகப் பழைய மாணவரும் இராமநாதன் கல்லூரியின் இளைப்பாறிய பிரதம ஆசிரியருமான திரு. சி. கே. சுவாமிநாதன் கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

பாடசாலையின் முகாமைக்காரர் திரு. இ சோமசுந்தரம் இப்பாடசாலையின் நிர்வாகத்தைப் பற்றியும் அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெரியார்கள் பற்றியும் பாடசாலையின் திறமையான சேவை பற்றியும் குறிப்பிட்டார்.

திரு. க. இராஜசிங்கம் டாக்டர் ச. தர்மலிங்கம் ஆகியோர் பேசிய பின்னர் கீழ் கண்டவர்கள் பழைய மாணவர் சங்க உத்தியோகத்தராக தெரிவு செய்யப்பட்டனர்!—

போஷகர்: திரு. சி. கே. சுவாமிநாதன், தலைவர்: டாக்டர் ச. அ. தர்மலிங்கம், உப தலைவர்கள்: திரு. நா. இராஜரத்தினம், திரு. க. கனகரத்தினம், காரியதரிசி: க. இராஜசிங்கம், உப காரியதரிசி: த. சுப்பிரமணியம், தனுதிகாரி: து. நவரத்தினம். ஆறு பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## புசல்லாவை இ. தி. மு. க. கிளை

இலங்கை திராவிட முன்னேற்றக்கழக புசல்லாவைக் கிளையின் பொதுக்கூட்டம் அணிமையில் தோழர் இசை தாவரசன் தலைமையில் பொலீஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் தோழர் ஏ. இளஞ்செழியன் பேசுகையில் பொதுமக்களிடையே அறியாமை, பிற்போக்கு கொள்கை, வாழ்க்கைக் கொவ்வாத மூட நம்பிக்கைகள் முதலியன வளரவிடாது இயக்கம் வேலை செய்ய வேண்டுமென்று கூறினுர்.

திருவாளர்கள்: திருமறவன், குறட்செல்வன், எம். கே. மோகன், புகழேந்தி, குமாரசாமி ஆகியோர் பேசிய பின் கூட்டம் முடிவடைந்தது.

## ● அதிபருக்கு பாராட்டு விழா

அகில இலங்கையிலும் புகழ் பெற்று விளங்கும் சதானந்த வித்தியாலயத்தில் முப்பதாண்டுகளாகச் சேவை புரிந்து இளைப்பாறிய அதிபர் திரு. அ. பொன்னுத்துரையின் சேவை நலம் பாராட்டு முகமாக அணிமையில் நடைபெற்ற ஒரு விழாவில், ஆசிரியர்கள் திரு. வ. நல்லதம்பி, திரு. வ. கந்தையா, திரு. வ. தம்பிப்பிள்ளை, சைவப்புலவர் ச. சச்சிதானந்தம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

## திருவள்ளுவர் இளையோர் கழகம்

திருவள்ளுவர் இளையோர் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா கடந்த 22-10-60-ல் நடந்தேறியது. விழாவுக்கு தலைமைதாங்கிய திரு மு. நிசவுஸ் 'வள்ளுவன் வகுத்த வாழ்க்கை நெறி' என்னும் பொருள்பற்றிச் சிறப்பாகப் பேசினுர்.

கழகச் செயலாளர் எஸ். டி. தமிழ்ச்செல்வன் பேசுகையில் தமிழர் தமிழுக்காகவே வாழ வேண்டுமென்றும் அதையே தமிழன்னை விரும்புகிருளென்றும் கூறினுர். திரு சி. அருள் அரசு பேசுகையில் தமிழன் தமிழனுேடு பேசும்போது ஆங்கிலத்தில் பேசுவதை விடக் கேவலம் வேறொன்றுமில்லை என்றும் கூறினுர்.

சென்ற ஆண்டில் நற்றொண்டாற்றிய உறுப்பினர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## இந்து இளைஞர் மன்றம்

கைதடி கிழக்கு இந்து இளைஞர் மன்ற செயற்குழு கூட்டம் கடந்த 23-10-60ல் மன்ற உபதலைவர் க. ச. சிவசுப்பிரமணியம் தலைமையில் கைதடி கிழக்கு ஜன சமூக நிலையத்தில் நடைபெற்றது.

அத்தருணம் காரியதரிசி, தனுதிகாரி, பத்திராதிபர் ஆகியோரின் அறிக்கைகளின் பின் செல்வன் செ. கந்தசாமி "தமிழ்த் தாயின் தனிச் சிறப்பு" என்னும் பொருள்பற்றியும், செல்வன் சே. செல்லத்துரை "இன்றைய இளைஞர்களின் போக்கு" என்னும் பொருள் பற்றியும், மன்றக் காரியதரிசி ஆ. கந்தையா "தமிழியக்கத்தால் உண்டாகும் பயன்கள்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றும்போது இனிமேல் எம் மன்ற ஊழியர்கள் அனைவரும் தமிழிலேயே எழுதுதல் வேண்டும். அவ்வாறு தமிழில் தொடர்பு கொள்ளாவிடின் தமிழ் தாய்க்கு தீங்கு விளைத்தவர்களாவோம் என்று சுட்டிக் காட்டினர்.

## தெல்தோட்டம் இ. தி. மு. க. கிளை

தெல்தோட்டம் இ. தி. மு. க கிளையின் தேர்தல் கூட்டம் கடந்த 16-10-60ல் பொதுக்குழு உறுப்பினர் தோழர் ஏ. சுந்தரராசன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

செயலாளர்: கே. மகாலிங்கம், துணைச் செயலாளர்: பி. வெ. கதிரேசன், பொருளாளர்: வி. செ. சாமிக்கண்ணு, பொதுக்குழு உறுப்பினர்கள்: ஆர். எஸ். பெருமாள், கே. எஸ் பெருமாள், எம். பி. செல்லையா, ஏ. எஸ், மைக்கல், பி. ஆர். அரமானிஸ், பி. எஸ். குமாரசாமி, தொண்டர் படைத் தலைவர் ஏ. சுப்பையா, தோழர் கே. பாலையாவின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

# படைப்பு?

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

போல அடுக்கு வசனம்தான் இலக்கியமெண்டு கருணநிதிக்கு கிண்ணி பிடிச்ச மாதிரி நினைச்சயாடா...?"

"நீ பெரிய திறந்தான்..."

"டேய்,டேய் இங்க பாருங்கடோ...இந்தக் கடலை சுத்தின தாளில யாரோ சிறு கதை எழுதியிருக்கான்..."

"வாசிரா பாப்பம்..."

"எல்லா பக்கத்தையும் தாங்கடா..."

ஆறு பக்கந்தானே இருக்கு...இன்னம் வேணும் என்னடா...?"

"கடலைக்காறக் கிழவிற்ற மிச்சம் இருக்கும்..."

போய் வாங்கிற்று வா, இன்னம் ரெண்டு சுறுள் கடலை..."

"காசி..."

"நீ குடு..."

ஒருவன் படிக்க ஆரம்பித்தான்..."சிறு கதை, 'என்ன வாழ்வு?' எழுதியவர், நடேசன்..."

"எந்த வெங்காயண்டா அது...?"

"சத்தம் போடாதடா..."

ஒரு எழுத்தாளன் தன் படைப்பைப் பிறர் படிக்கும்போது ஒருவித புல்லரிப்புக்காளாகிறுன். பரீட்சாதிகாரிக்கு முன் விடைத்தாளைக் கொடுத்துவிட்டு நிற்கும் மாணவனுகிறுன், நடேசனுக்கு முத்து முத்தாக இரண்டொரு துளிகள் முகத்திலே...

"அடேய், நல்லாதாண்டா எழுதியிருக்கான்."

நடேசனின் மார்பு பூரிப்பால் விம்மியது. நெஞ்சை நிமிர்த்தித் தடவிப் பார்த்துக் கொண்டான்......'ஒரு எழுத்தாளனுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்...பரிசு கிடைக்கிறதுக்கு காரியமில்லை...என் படைப்பை இப்பிடி நாலு பேர் சொன்னுல்......அதுவே எல்லாத்தையும் காட்டிப் பெரிசு. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு சுவையுள்ள கதையைப் பிடிக்கும்...... அவங்களுக்குப் பிடிச்சசுவையுள்ள கதைக்கு பரிசு...... அதுக்காக நாம எழுதாம விடுகிறதா? 'குளத்தோட கோவிச்சிக்கொண்டு குண்டி கழுவாமல்' விட்டமாதிரி... எல்லாரும் பரிசு கிடைக்க வேணுமெண்டு நினைச்சா போட்டியே வைக்கத் தேவையில்ல...... எல்லாருக்கும் பரிசைக் கொடுத்துவிட வேண்டியதுதான் — இப்படியெல்லாம் நினைக்கிறது எவளவு தப்பு...முட்டாள்தனம்- ஆத்மதிருப்திக்காகவாவது எழுதத்தான் வேணும்...'— உமிழ் நீரை மென்று விழுங்கினுன். இதழ்களிலே ஒரு இள நகை...

"டேய், அந்தக் கிழவிற்ற இருக்கிற பேப்பர் அவளையும் வாங்கிருவம்...என்னத்துக்கும் உதவும்டா..."

ஒருவன் எழுந்து நடந்தான்.

ஒரு விஞடிதான்—

'திடும்' என நடேசன் அவனை முந்திக் கொண்டு, அந்தக் கடலைக்கார அன்னியாச்சியை நோக்கி ஓடினுன்......!

## தமிழர் மனம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகத்தே வீட்டிலுள்ளே
கிணற்றேரத்தே
ஊரினிலே காத லென்றல்
உறுமுகின்றுர்;
பாடைகட்டி யதைக் கொல்ல
வழி செய்கின்றுர்;
பாரினிலே காத லெனும்
பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறுமையினுல்
விதிகள் செய்து
முறை தவறிட ரெய்திக்
கெடுகின்றுரே''

—பாரதி அறுபத்தாறு

# திக்கெட்டும் வெற்றிமுரசு கொட்டும்
## 3-வது வாரம்!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [குர்ப்பனித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

விஜயா [மட்டக்களப்பு] லக்ஷ்மி [இரத்தினபுரி] விஜிதா [மஸ்கேலியா] சம்ரோக் [வென்னப்புவ]

ஸ்ரீகிருஷ்ண [திருகோணமலை] மொடர்ன் [பதுளை] மொடர்ன் [பண்டாரவளை] தீவொளி [நுவரெலியா] வெம்பிளி [கண்டி]

தெள்ளு தமிழை அள்ளி வீசும் திரை வானிலே
தீரமும், வீரமும் நிறைந்து வாட்போர் செய்ய
இதுவரை ஒரு சிலரே இருக்கிறார்கள் என்று
ஏங்கியிருந்த ரசிகர்களின் உள்ளத்திலே
உவகையூட்ட, எதிர்காலத்தில் தரணியிலே
தன்னிகரில்லா வீரனாக விளங்க இப்படத்தின்
மூலம் அறிமுகமான

## சி. எல். ஆனந்த்

தன் திறமையைக் காட்டி வெற்றிவாகை சூடிவிட்டார்.

ஆங்கில வீரர்களும் அதிசயம் அடையக் கூடியதாக அற்புத
மாக வாட் போர் செய்து நடித்திருக்கிறார்
—ஆனந்த்





இதுவரை பார்த்திராத குதிரைச் சவாரி
வீரனாகவும் காட்சி தருகிறார்.

## அற்புதம் - ஆச்சரியம்

என்று பார்த்தோர் கூறுகிறார்கள். பார்க்காதவர்
இவைகளைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறார்கள்.

இதன் உண்மையை அறிய
இன்றே பாருங்கள்

சி. எல். ஆனந்த்—அசோகன்
ராமதாஸ்—எஸ். ராமராவ்—ஹேமலதா
காமினி—சந்திரகாந்தா—சகுந்தலா
மாஸ்டர்கோபால்
முதலியோர் நடித்த

# விஜயபுரி வீரன்

டைரக்ஷன்: ஜோஸப் தளியத் Jr. — தயாரிப்பு: ஜோஸப் தாமஸ் — சங்கீதம்: டி. ஆர். பாப்பா

பின்னணி:

ஏ. எம். ராஜா—ஜிக்கி—பி. சுசிலா—ஏ. பி. கோமளா—எஸ். வி. கிருஷ்ணன்—எஸ். ஜானகி
டி. வி. ரத்தினம்—டி. எல். ராஜேஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்தை சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 நவ. 6-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.